ISSN 1391-9504

Vijey விஜய்


# விஜய்

30.04.2014 - மலர் 11, இதழ் 09

## 'இன்கா' நாகரிகத்தின் தோற்றம்...



## 'GPS' என்றால் என்ன?



விலை
ரூபா 15/-

## கனவு எவ்வாறு உருவாகின்றது?



மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01) இந்த மரக்கிளையில் கட்டப்பட்டிருப்பது என்ன?

1. பலூன்
2. தேன்கூடு
3. மின்குமிழ்

02) இதன் அருகில் வட்டமிட்டுக் கொண்டிருப்பவை;

1. வண்ணத்துப்பூச்சிகள்
2. கரப்பான் பூச்சிகள்
3. தேனீக்கள்

03) தேனை விரும்பி உண்ணும் பிராணி எது?

1. யானை
2. கரடி
3. சிறுத்தை






01) இதுவொரு;

1. பலசரக்குக் கடை
2. பூக்கள் விற்பனை செய்யும் இடம்
3. பழங்கள், மரக்கறிகள் விற்பனைக் கடை

02) இங்கு பொருட்களை வாங்கிக் கொண்டிருப்பவர் தனது கையில் வைத்திருப்பது;

1. கூடை 2. குடை 3. பை

03) நாம் கடையொன்றில் பொருட்களை வாங்கிய பின்னர், கடைக்காரருக்கு கொடுப்பது;


1. அன்பளிப்பு 2. பணம் 3. பொருள்

01) இங்கு எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

..................................................................

02) அவற்றின் நிறங்களை எழுதுக.

..................................................................



03) எந்த நிறத்தில் அதிக எண்ணிக்கையிலான முக்கோணங்கள் உள்ளன?

1. மஞ்சள் 2. சிவப்பு 3. ஊதா

04) மிகப் பெரிய முக்கோணத்தின் நிறம் யாது?

1. சிவப்பு 2. பச்சை 3. மஞ்சள்

01) கம்பளிப்பூச்சி தனது உடம்பில் சுமந்து செல்வது;

1. எண்கள் 2. எழுத்துக்கள் 3. உணவு

02) இங்குள்ள ஒற்றை எண்கள், இரட்டை எண்கள் யாவை?

ஒற்றை எண்கள் - ..............................................

இரட்டை எண்கள் - ..............................................

03) இந்த கம்பளிப்பூச்சிக்கு எத்தனை கால்கள் உள்ளன?

..................................................

04) கம்பளிப்பூச்சியில் ஒற்றை எண்கள் உள்ள வட்டங்களை மஞ்சள் நிறத்திலும் இரட்டை எண்கள் உள்ள வட்டங்களை செம்மஞ்சள் நிறத்திலும் நிறந்தீட்டுக.




-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துச் செல்லும் உலக வெப்பநிலை காரணமாக; மனிதனின் ஆரோக்கியம், உணவு பாதுகாப்பு, வசதியான இல்லம், தேசிய பாதுகாப்பு என்பன பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. உலகில் நிலவும் சீரற்ற காலநிலை மாற்றங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாகவும் அச்சபை மேலும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் ஜப்பானின் யோக்கொஹோமா நகரில் நடைபெற்ற 'உலக காலநிலை மாற்றம்' தொடர்பிலான பேச்சுவார்த்தையின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோதே, இந்த முக்கிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த பேச்சுவார்த்தையில் உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகளும் சட்டவரைஞர்களும் கலந்துகொண்டிருந்தனர்.



# உலக வெப்பநிலை அதிகரிப்பு: மனித வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமையும்!



## காலநிலை மாற்றம்

இந்த அறிக்கையின்படி, காலநிலை மாற்றத்தினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற்படவுள்ள பாதிப்புகள் அதிகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. காலநிலை மாற்றத்தின் பாரிய விளைவாக ஏற்படும் வெப்ப அதிகரிப்பானது; மனிதனின் சுகாதாரம், உணவு, வீடு மற்றும் தேசிய பாதுகாப்பு என்பனவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கம் மிகவும் மோசமானதாக இருக்கும் என்று அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

உலக வெப்பநிலை அதிகரிப்புக்கு ஏதுவான காரணிகள், அழுத்தங்கள் மற்றும் அதற்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் 'காலநிலை மாற்றம் தொடர்பிலான அரசாங்கங்களின் குழு' எனப்படும் IPCC- Intergovernmental Panel of Climate Change எனும் அமைப்பினால் நடாத்தப்பட்டு வந்த பேச்சுவார்த்தையில் இது இரண்டாவது தொடர் அறிக்கையாகும். இதன் முதலாவது அறிக்கை 2007 இல் வெளியிடப்பட்டது. 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலக வெப்பநிலை அதிகரிப்புக்கு ஏதுவான காரணிகளின் எண்ணிக்கை இந்த வருடம் இரு மடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும், காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்புகள் காரணமாக எதிர்வரும் 20-30 ஆண்டுகளில் இயற்கைச் சூழல் தொகுதிகளில் ஏற்படக்கூடிய குறுகிய கால பாதிப்புக்கள் குறித்தும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், உணவு பாதுகாப்பு குறித்தும் இந்த அறிக்கையில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## ஐ.நா. சபை அறிவிப்பு

சோளம், நெல் மற்றும் கோதுமை என்பனவற்றின் விளைச்சல் 2050 ஆம் ஆண்டளவில் மிக வேகமாகக் குறைந்துவிடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு மற்றும் வெப்பநிலை அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக ஏற்படும் மரணங்களும் அதிகரிக்கும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளின்போது தேசிய பாதுகாப்பு தொடர்பான சிக்கல் நிலைமைகள் ஏற்படுவதனையும் தவிர்க்க முடியாமல் இருக்கும் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உலகெங்கும் நிகழும் காலநிலை மாற்றங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை சமர்ப்பித்துள்ள இந்த அறிக்கையானது, காலநிலை அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்த கட்டுப்பாடு என்பன குறித்து முன் ஆயத்தங்களை மேற்கொள்ள வழிகாட்டுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். காலநிலை மாற்றம் உண்மையில் அத்தியாவசியமான விடயமாக இருப்பினும், இவ்விடயம் எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், புத்திசாதுர்யத் தன்மையுடன் செயற்பட வேண்டியுள்ளதாக விஞ்ஞானிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

(ரி)



விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியின் சூழ்ச்சி



ஒரு காட்டில் நன்கு அடர்ந்து வளர்ந்திருந்தது ஓர் ஆலமரம். அந்த ஆலமரத்தில், அளவுக்கு அதிகமான விழுதுகள் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தப் பக்கமாக ஒரு நரி தளர்ந்த நடையுடன் வந்துகொண்டிருந்தது. அன்றைய தினம் ஒரு இரையும் அதற்குக் கிடைக்கவில்லை.

அப்போது, மான் குட்டி ஒன்று அந்தப் பக்கமாக வருவதைப் பார்த்த நரிக்கு ஒரு யோசனை தோன்றியது. அதைச் செயற்படுத்தவும் ஆயத்தமானது. அதனிடம் சென்று, "ஏ! மான் குட்டியே.... உன்னால் எனக்குச் சமமாக ஓட முடியுமா? துள்ளிக் குதித்துப் பாய்ந்து ஓடத் தெரியுமா?" எங்கே இந்த ஆலமரத்தின் பக்கமாக ஓடு பார்க்கலாம் என்றது.

இதைக் கேட்ட மான் குட்டி, "ஓ! நான் நன்றாகவே ஓடுவேன்!" என்று விரைவாக ஆலமரத்தின் பக்கமாக ஓடியது. அதனுடன் நரியும் ஓடிச் சென்றது. ஆலமரத்தின் கீழ் துள்ளிக் குதித்து மான் ஓடியதால், ஆலமரத்தின் விழுதுகள், வேகமாக வந்த மான்குட்டியின் வயிற்றிலும், கழுத்திலுமாக சிக்கிக் கொண்டன. அதில் இருந்து மானால் விடுபட முடியவில்லை. இதைப் பார்த்த நரி, ஹா.....ஹா.....ஹா..... என்று சிரித்துக்கொண்டே, "ஏ! மான்குட்டியே.... நான்றாக மாட்டிக் கொண்டாயா! இதோ இன்னும் சற்று நேரத்தில் குளித்துவிட்டு வருகிறேன். இன்று நீதான் எனக்கு விருந்து" என்று கூறிவிட்டு அருகிலுள்ள ஒரு குளத்தை நோக்கி நரி சென்றது.

ஆபத்தில் மாட்டிக்கொண்ட மான்குட்டி, "தன்னை விடுவிக்க யாரும் வரமாட்டார்களா?' என்று தவித்துக்கொண்டிருந்தது. ஆனால், அந்த மரத்தின் மேலே ஏற்கனவே உட்கார்ந்திருந்த ஒரு குரங்கு நடப்பதை அவதானித்த படியே இருந்தது. அக்குரங்கானது, மான்குட்டியை அழைத்து. "ஏ! மான்குட்டியே... எல்லாவற்றையும் நான் இங்கிருந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். யார் எதைச் சொன்னாலும், எதற்குச் சொல்கின்றனர் என்பது பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அதிலும் இந்த நரி உன் இனத்தாரின் எதிரி அல்லவா? மற்றவர்களை தந்திரமாக ஆபத்தில் சிக்க வைப்பதில் கைதேர்ந்ததாயிற்றே! இனிமேலாவது சிந்தித்துச் செயல்படு" என்று கூறி, மான்குட்டியின் மீது சிக்கியிருந்த விழுதுகளை அப்புறப்படுத்தி அதை விடுவித்தது.

"என்னை மன்னித்து விடுங்கள்! இனி இவ்வாறு சிந்திக்காமல் செயல்பட மாட்டேன்" என்றது மான் குட்டி. "சரி! சரி! எல்லாவற்றையும் உணர்ந்துகொண்டால் சரிதான். நீ உடனே அந்த நரி வருவதற்குள்ளாக இங்கிருந்து தப்பித்து ஓடிவிடு," என்று கூறியது. மான் குட்டியும் தன்னைக் காப்பாற்றிய குரங்குக்கு, "நன்றி" கூறிவிட்டு, தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடி மறைந்தது.

திரும்பி வந்த நரி, மரத்தின் அருகில் மான் குட்டியை காணாது பெருத்த ஏமாற்றமடைந்தது.

# கடவுளின் கருணை



கோட்டையூர் என்ற ஊரில் அருணாச்சலம் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகுந்த கடவுள் பக்தி கொண்டவர். வாழ்க்கையில் இன்பமோ, துன்பமோ எது நடந்தாலும் எல்லாம் கடவுள் செயல் என்று சொல்வார். இறைவன் அருள் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பது அவருடைய கொள்கை. அதே ஊரில் தங்கையா என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் அருணாச்சலத்திற்கு நேர் எதிரானவர்.

கடவுளே இல்லை என்று சொல்லும் கொள்கையுடையவர். எனினும், அவரது வசதிக்கு குறைவில்லை. எனவே, அருணாச்சலத்தைப் பார்க்கும் போதெல்லாம் கேலி செய்வார். காரணம் அருணாச்சலம் ஏழை. "நீ நம்பி இருக்கும் கடவுள் உன்னை மட்டும் ஏழையாக வைத்துவிட்டு என்னை மட்டும் பணக்காரனாகப் படைத்திருக்கிறார் பார்த்தாயா?" என்றெல்லாம் கேலி செய்வார்.

"அனைத்திற்கும் ஒரு காரணம் இருக்கும். அதை இறைவனைத் தவிர, வேறு யார் அறிய முடியும்" என்று பதில் சொல்வார் அருணாச்சலம்.

ஒருநாள் உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது. அப்போது அந்த வழியாக குடை பிடித்துக்கொண்டு வந்துகொண்டிருந்தார் தங்கையா. குடை வாங்க வசதியில்லாத அருணாச்சலம் வெயிலில் வியர்வை வழிந்தோட வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்டதும் அருணாச்சலத்திற்கு மிகவும் சந்தோஷம்.

வழக்கம்போல் அருணாச்சலத்திடம் "என்ன அருணாச்சலம் வெயிலில் வியர்த்து விறுவிறுக்க எங்கே போகிறாய் எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லும் உமக்கு ஒரு குடை கொடுக்க வேண்டும் என்று அந்த கடவுளுக்குத் தெரியாதா? என்னய்யா கடவுள்?" என்று கேலி செய்தார். வெயிலின் கொடுமை ஒரு புறம்; தங்கையாவின் தொடர் தொல்லை மறுபுறம் சேர்ந்துகொண்டு அருணாச்சலத்திற்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"அந்தக் கடவுளின் கருணை இல்லையென்றால் உன் கையில் குடை இருந்தாலும், நீ அதை பிடித்துச்செல்ல முடியாது. அதைக் கையில் வைத்துக்கொண்டு தலை காய ஓடுவாய் என்பதை மட்டும் மறந்துவிடாதே. இறைவனது கருணையை எப்போதும் கேலி செய்யாதே," என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தார்.

"பெரிய தத்துவம்" என்று சிரித்துக் கொண்டே நடந்தார் தங்கையா. சிறிது தூரம்கூட நடந்திருக்கமாட்டார். அதற்குள் வெறி நாய் ஒன்று அவரைத் துரத்த ஆரம்பித்தது. உயிர் பயத்தில் ஓட்டம் பிடித்தார் தங்கையா. நாயோ பயங்கரமாக துரத்திக்கொண்டு வந்தது. குடையை பிடித்துக்கொண்டு ஓடுவதற்கு அவருக்கு சிரமமாக இருந்ததால், குடையையும் வீசிவிட்டு ஓட்டமாக ஓடி உயிர் தப்பிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

அப்பொழுதுதான் அவர் மனதில் அருணாச்சலம் சொல்லிவிட்டுச் சென்ற வார்த்தைகள் நினைவுக்கு வந்தது. கடவுளின் கருணை இல்லாவிட்டால் கையில் குடை இருந்தாலும் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்தார். அவரை அறியாமல் ஒருவித பயம் அவரை ஆட்கொண்டது. அன்றிலிருந்து அருணாச்சலத்தை கேலி செய்வதை நிறுத்தியதோடு, கடவுளையும் நம்ப ஆரம்பித்தார்.

# பலன்

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை ஜோதிடரும் இதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். ஒருநாள், "அரசே, அதிகாலையில் எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் அந்த நாள் சிறக்கும்" என்று நம்பிக்கை ஊட்டினார். மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால், உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.

அதனால், தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விடுவான்.




ஒருநாள் அரண்மனைக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் சேவகன் கண்டான். 'அடடா! நல்ல சகுனம் ஆயிற்றே. இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார்' என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடிச் சென்று மன்னரிடம் விபரம் சொன்னான்.

இதைக்கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காகம் பறந்து சென்றுவிட்டது. மன்னனுக்கு கோபம் ஏற்படவே தளபதியை அழைத்து, "இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்துக் கசையடி கொடு" என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித்துவிட்டான். மன்னனுக்கு ஆத்திரம் மேலும் அதிகமானது. "நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் மேலும் பத்துக் கசையடி கிடைக்கும்" என்று உறுமினான். சேவகன் கூறினான், "மகா மன்னரே! இன்று நான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தமைக்கு எனக்கு சிறந்த பலன் கிடைத்துவிட்டது" என்றான். இதைக் கேட்ட மன்னருக்கு உண்மை புரிந்தது. தன்னுடைய முட்டாள்தனத்தை எண்ணி நொந்தவாறு சேவகனை விடுதலை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# 'கனவு' என்பதன் அர்த்தம் என்ன?



நாம் பார்த்த, கேட்ட அல்லது உணர்ந்த விடயங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி, மிகைப் படுத்தப்பட்ட வடிவில் தோன்றுவதே 'கனவு' என்று கனவிற்கு ஒரு வரைவிலக்கணம் உண்டு.ஆனால், இதில் பலருக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கும். சிலருக்கு நிம்மதியான தூக்கத்தைக் கொடுக்கவும் சிலரின் தூக்கத்தைக் கெடுக்கவும் இந்த கனவுகள் காரணமாக அமைகின்றன. பொதுவாக, ஒருவர் தன் மொத்த ஆயுள்நாட்களில் சுமார் 6 வருடங்களை கனவு காண்பதற்காக செலவழிப்பதாக அண்மைய ஆய்வொன்றின்மூலம் கணிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நம் ஒவ்வொருவரது வாழ்விலும் வெகுவாக பாதிக்கும் கனவுகளைப் பற்றி சில விபரங்களை அறிந்துகொள்வோம்.

## REM எனும் கட்டம்

கணினியைவிட மிகச் சிக்கலான இயந்திரம்தான் எமது உடல். ஆகவே, அதற்கு சற்று ஓய்வு தேவையல்லவா? அந்த ஓய்வை அளிக்க உருவானதுதான் 'நித்திரை'. இரவாகிவிட்டால் அல்லது உடல் களைப்படைந்துவிட்டால், நித்திரை எம்மை ஆட்கொண்டுவிடும். நித்திரை செய்ய ஆரம்பித்ததும் என்ன நடக்கிறது என்று தெரியுமா? நாம் நித்திரை செய்யும்போது 'REM' (Rapid Eye Movement-விரைவான கண் சிமிட்டல்) எனப்படும் சில கட்டங்கள் நிகழ்வதுண்டு.

நம் கண்களின் இத்தகைய அசைவுகளையும் நம் மூளையின் பிற தொழிற்பாடுகளையும் வைத்து, விஞ்ஞானிகள் சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். அதாவது, நம் தூக்கத்தின் பல நிலைகளில் இந்த REM கட்டம் வருவதாகவும் தூக்கத்தின் ஆரம்பக் கட்டத்தை விடவும் இறுதிக் கட்டங்களில் REM நிலையில் இருக்கும் நேரம் அதிகம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஒருவர் நித்திரையில் இருக்கும் மொத்த நேரத்தில் 20% முதல் 25% மான நேரம் REM நிலையில் இருப்பார். இது 5 முதல் 20 நிமிடங்கள் வரை நீடிப்பதாக அமையும்.

இந்த REM நிலைக்கும் கனவுகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன?

இந்த REM காலப்பகுதியில்தான் எமக்கு கனவுகள் வரக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், இந்த காலப்பகுதியில் வரும் கனவுகள்தான் அதிகம் நினைவில் இருக்கும் என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

## கனவுகளின் வரலாறு

முற்காலத்தில் பெரும்பாலான மக்கள் கனவுகளை கடவுளின் செய்தியாகவே கருதி வந்தனர். கடவுள் தம்முடன் பேசும் ஓர் ஊடகமாக கனவினைக் கருதிய அம்மக்கள், ஒவ்வொரு கனவிற்கும் அர்த்தம் தேட முனைந்தனர். வேறு சிலரோ, எதிர்காலத்தை முன்கூட்டியே அறிவிக்கும் தரிசனமாகவே கனவுகளைக் கருதினர். இன்னும் சிலர், இறந்துபோன தம் மூதாதையர்களோ அல்லது அன்பிற்குரியவர்களோ கனவு வழியாக தம்முடன் உரையாடுவதாக நம்பினர். சாதாரண மனிதர்கள் மட்டுமன்றி, உலகின் மாமன்னர்களும்கூட தங்கள் கனவுகளுக்கு அர்த்தம் கூறுவதற்காக விசேட திறன்படைத்தவர்களை நியமித்திருந்தனர். மன்னன் தினசரி காணும் கனவுகளுக்கு விளக்கம் அளிப்பதே இவர்களின் வேலையாக இருந்தது. தமது பணிக்காக பரிசு பெற்றவர்கள் ஒருபுறமிருக்க, ஏதோ மனதில் பட்டதைக் கூறிவிட்டு சவுக்கடி வாங்கியவர்களும் ஏராளமானோர் உள்ளனர்.

## திரை உலகில் 'கனவுகள்'

கனவுகளை மையப்படுத்தி பல திரைப்படங்களும் காட்டூன்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், உலகப் புகழ்பெற்ற 'Alice in Wonderland' என்ற திரைப்படக் கதைகூட ஒரு சிறுமியின் கனவைப் பற்றியே விவரிக்கின்றது. அத்துடன், 'Wizard of OZ' என்ற திரைப்படமும் கனவினை அடிப்படையாகக் கொண்டதாகும். 'Inception' என்ற அறிவியல்சார் திகிலூட்டும் திரைப்படமும் இங்கு குறிப்பிடத்தக்கது.



## மூளையில் நிகழும் மாற்றங்கள்

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் REM நிலையின்போது, உடலிலும் மூளையிலும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. உதாரணமாக: நம் தசைகளின் அசைவுகளைக் கட்டுப்படுத்தும் சில சுரப்பிகள் REM நிலையின் போது தொழிற்படுகின்றன. சிலருக்கு இவை சரியான நேரத்தில்-சரியான அளவில் தொழிற்படாவிட்டால், கனவில் என்னவெல்லாம் செய்வார்களோ அதனையே தூக்கத்திலும் செய்வார்கள். அதாவது, தசைகளின் அசைவை எதுவுமே கட்டுப்படுத்தாமையால், கனவில் ஒருவர் சண்டையிடும்போது உண்மையில் அவரருகே படுத்திருப்பவர் அடி, உதை வாங்க வாய்ப்புண்டு. அத்துடன், இதயத் துடிப்பு மற்றும் சுவாச வீதமும்கூட REM நிலையின்போது மாற்றம் அடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


சிக்மன்ட் ஃப்ரொய்ட்

## சிக்மன்ட் ஃப்ரொய்ட்

கனவுகளைப் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டவர்களில் முதன்மையானவர் தான் 'சிக்மன்ட் ஃப்ரொய்ட்' (Sigmund Freud) என்பவர். ஒஸ்ட்ரியாவைச் சேர்ந்த இவர், மனோதத்துவ நிபுணராக பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார். 'கனவு என்பது வெறும் மாயை' என்று பல ஆய்வாளர்கள் கூறிவந்த காலத்தில், 'கனவுகளுக்கு அர்த்தம் உண்டு' என்று இவர் கூறினார். அதாவது, கனவுகளின் மொழியை அறிந்துகொண்டால், அதை சரியான முறையில் புரிந்துகொண்டால் நிச்சயம் அதற்கான அர்த்தம் கிடைக்கும் என்று இவர் கூறினார். 'மனிதனின் ஆசை அல்லது அச்சம் என்பனவே அவன் தூங்கும்போது கனவாக வெளிப்படுகின்றது என்பது இவரின் கண்டுபிடிப்பு ஆகும். -ஜெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**'இன்கா' நாகரிகத்தின் தோற்றம் கி.மு 1000 இல் நிகழ்ந்ததாக கருதப்படுகின்றது. தென் அமெரிக்காவின் நாகரிகமாகவும் இன்கா நாகரிகம் கருதப்படுகின்றது. இந்த நாகரிகத்தின் வளர்ச்சிக்கு பலதரப்பட்ட இனக் குழுமங்கள் பங்களிப்பு செய்துள்ளன. இந்த நாகரிகத்தின் பொற்காலம் என கருதப்படும் காலப்பகுதியில் இன்கா இன மக்களின் ஆட்சி இடம்பெற்றுள்ளது. அதனால், இந்த நாகரிகத்தினை 'இன்கா நாகரிகம்' என்று அழைக்கின்றனர்.**

# 'இன்கா' மக்களின் உ

## நாகரிகம் பற்றி அறிவோம்

'இன்கா' நாகரிகத்தின் தோற்றத்திற்கு முன்பு அந்தீஸ் உயர்மலைப் பகுதிகளினைச் சேர்ந்த மக்கள் குழுமம் ஒன்று 'வச்சின்' என்ற நகரம் ஒன்றை நிறுவியிருந்தது. காலப்போக்கில் அவர்கள் தற்போது 'பேரு' என்று அழைக்கப்படுகின்ற பகுதியின் கரையோரப்பகுதிகளில் வசிக்க ஆரம்பித்தனர். பின்னர் டியஹுவனாகோ என்ற நகரத்தினை சூழ மேலும் ஒரு மக்கள் இனக் குழுமம் நாகரிகம் ஒன்றை கட்டியெழுப்பினர். வட கரையோரப்பகுதியில் 'விமு' எனப்படும் பழங்குடியினரும் தென் கரையோரப்பகுதியில் 'நஸ்கா' நகரத்தினை சூழ 'புரேவியா' என்ற பழங்குடியினரும் நாகரிகத்தினைக் கட்டியெழுப்பினர்.

மேற்கூறப்பட்ட இன்காக்கள் ஆட்சி செய்த தென் அமெரிக்க நாகரிகத்தின் பொற்காலமாக கி.மு 500 முதல் கி.மு 1500 வரையிலான காலப்பகுதியினை குறிப்பிட முடியும். இக் காலப்பகுதியில் அவர்கள் 'மன்கோ' கப்பாக் என்ற தலைவரின் கீழ் 'குஸ்கோ' என்ற நகருக்கு இடம்பெயர்ந்தனர். வரலாற்று ரீதியில் இவர்களின் உண்மையான ஆட்சியாளராக 'சின்ச்சிரொக்கா கருதப்படுகின்றார். இவரை 'சாப்பா இன்கா' என்ற பெயராலும் அழைக்கின்றனர்.




## அமைவிடம்

'இன்கா' அரசு நிலவிய பகுதியினை மூன்று பகுதிகளாகப் பிரிக்க முடியும். மலை சார்ந்த நிலப்பகுதி, காடுகள் கொண்ட நிலப்பகுதி, பாலைவனம் கொண்ட நிலப்பகுதி என்று இந்த பிரிவுகள் காணப்பட்டன. மலை சார்ந்த நிலமாக அந்தீஸ் மலைப்பகுதி கருதப்படுகின்றது. அங்கு வடக்கில் இருந்து தெற்குப்பகுதி வரை 'இன்கா' மக்கள் பலம் பெற்றிருந்தனர். காட்டுப்பகுதி நிலமாக அமேசன் வனாந்தரப்பகுதி கருதப்படுகின்றது. அந்தீஸ் மலைப்பகுதியின் ஒரு பகுதி 'அமேசன்' வனாந்தரத்துக்குரியதாகும். இப்பகுதியும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததாக கருதப்படுகின்றது.
பாலைவனப்பகுதி என்பது கரையோர பாலைவனப்பகுதியாகும். அதாவது 'அந்தீஸ்' மலைப்பகுதி மற்றும் பசுபிக் சமுத்திரத்திற்கு இடைப்பட்ட 2000 மைல் நீளமும், 100 முதல் 300 மைல் அகலமும் கொண்ட பகுதி கரையோரப் பாலைவனமாகும். சில விஞ்ஞானிகள் இப்பகுதியானது, உலகின் மிகவும் உலர்வான பகுதி என்று குறிப்பிட்டுள்ளனர்.

## இன்கா ஆட்சி

இவர்களின் ஆட்சி சர்வாதிகார தன்மையினைக் கொண்டிருந்தது. ஆனாலும், சிறந்த ஆட்சியாளர் களாக திகழ்ந்த இவர்களை, 'டோபா' இன்கா என்று அழைப்பர். இங்கு ஆட்சியாளர் கடவுளின் அருளாளர் என்று கருதப்பட்டார். மேலும் அவர் சூரியனில் இருந்து வந்தவர் என்று கருதப்பட்டார். அரச பரம்பரையினருக்கும் அவர்களது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் சமூகத்தில் உயர் அந்தஸ்து வழங்கப்பட்டது. அவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பும் அனைத்து துறைகளிலும் முதல் இடமும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மக்கள் வாழ்க்கை

'இன்காக்கள்' மூன்று இனக் குழுமத்தை சேர்ந்தவர்களாக இருந்தனர். உயர் வகுப்பினர், தாழ்ந்த வகுப்பினர், அடிமைகள் என்று இன்காக்கள் பிரிக்கப்பட்டனர். யுத்தக் கைதிகள் அடிமைகளின் பிள்ளைகள் ஆகியோர் அடிமைகள் வகுப்பினைச் சேர்ந்தவர்களாவர்.

தாழ்ந்த வகுப்பினர் விவசாயிகளாவர். இந்த ராஜதானியில் 110 குடும்பங்கள் அலகுகளாக இனக் குழுமப் பிரிவுக்குள் அடக்கப்பட்டன. இந்த இனங்கள் மற்றும் மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் பயிர்செய்யக்கூடிய நிலப்பகுதியும் பகிர்ந்தளிக்கப்பட்டது. யுத்த நடவடிக்கைகளின்போது வீதி அமைப்பு மற்றும் தொழில்சார் தகவல் சேவைகளில் ஈடுபட்டோருக்கு பொதுச் சொத்தில் பராமரிப்பு செலவுகள் வழங்கப்பட்டன.

## விவசாயம்

உலகிலேயே முதலாவதாக கிழங்கு உற்பத்தியினை மேற்கொண்டவர்களாக 'இன்காக்கள்' கருதப்படுகின்றனர். மேலும் அவர்கள் சோளம், சீனிக் கிழங்கு, பூசணி வகைகள், தக்காளி, நிலக்கடலை, மரவள்ளி, அன்னாசி, கொய்யா, மிளகாய், கொக்கோ போன்ற பயிர்களையும் பயிரிட்டனர். 'லாமா' என்ற விலங்கினை சுமைகளை சுமக்க இவர்கள் வளர்த்துள்ளனர்.

## கல்வி

கணக்குப் பார்த்தலுக்காக வகைப்படுத்தப்பட்ட நூல்களை முடிச்சிட்டு விசேட வழிமுறையொன்றை இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். இதனை 'கைப்பு' என்று கூறுவர். குடிசன மதிப்பீட்டிற்கும் இதனை இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். இவற்றை பல வர்ணங்களால் அலங்கரித்துள்ளனர். கல்வியில் செல்வந்தர்களுக்கும், அரச பரம்பரையினருக்கும் முதலிடம் வழங்கப்பட்டது. இதன்படி கல்வி நடவடிக்கைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. தொழில் கல்வி, முறைசார் கல்வி என்பனவே அப்பிரிவுகளாகும். முறைசார் கல்வி செல்வந்த வகுப்பினருக்கு உரியதாக இருந்ததுடன், தொழில்சார் கல்வி பொதுவான கல்வி முறையாக நிலவியது.

## இன்கா மம்மி முறை


'இன்கா' இன மக்கள் மத்தியிலும் 'மம்மி' முறையில் சடலங்களைப் பதப்படுத்தும் முறை காணப்பட்டது. அவர்கள் மம்மி முறை தொடர்பில் இரண்டு அணுகுமுறைகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஆட்சியாளர்களுடைய சடலங்கள் ஒரு முறையிலும், கடவுளுக்காக நரபலி கொடுக்கப்பட்டவர்கள் சாதாரண மம்மிகளாகவும் ஆக்கப்பட்டனர். ஆட்சியாளர்களின் மம்மிகள் குஸ்க்கோ நகரில் அடக்கம் செய்யப்பட்டன. பலியிடப்பட்ட மம்மிகள் பல்வேறு இடங்களில் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இவ்வாறு பலியிடப்படுவதற்காகக் கொல்லப்பட்டு மம்மியாக்கப்பட்ட சிசுவின் சடலம் ஒன்று தென் பேருவின் அம்பாட்டோ மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை 'ஜுவனிட்டா' என்று அழைப்பர். 'மம்மி' முறைக்காக அவர்கள் இயற்கை முறையினையே பின்பற்றினர் என்பதனை இச்சடலங்களினூடாகக் காண முடியும்.






உலோகப் படைப்பொன்று


சிற்பம்


கட்டட சுவர்


கல்லறை



## கட்டடங்கள்

பேரரசின் சகல இடங்களிலும் அழகுமிகு தேவாலயங்களைக் காண முடியும். இவை தூரப்பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட பாரிய கற்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கற்கள் ஒன்றுடன் ஒன்று நன்கு பொருத்தப்பட்டுள்ளன. இங்கு 'மொச்சே' என்ற இடத்தில் பிரமிட் வடிவ கட்டடங்களைக் காணமுடியும். உலகின் பிரசித்தி பெற்ற 'மாட்சுபிட்சு' புராதன நகரமும் இன்காக்களின் உருவாக்கமேயாகும். இதனை உலகின் மரபுரிமைச் சொத்தாக 'யுனெஸ்கோ' பிரகடனப்படுத்தியுள்ளது.

## மதம்

இவர்கள் பலவிதமான கடவுள் வழிபாடுகளில் ஈடுபட்டவர்களாவர். 'டியஹுவானாகோ' காலப்பகுதியில் ச்சாராவோத்தா என்ற பனிக் கடவுளை வணங்கியுள்ளனர். இவர் மழை மற்றும் இடி முழக்கம் என்பனவற்றுடன் நேரடி தொடர்புடைய கடவுளாவார். குறிப்பாக 'இன்க்கா' மக்கள் சூரியனை முழுமுதற் கடவுளாக வணங்கினர். அவர்களின் ஆலயங்கள் சூரியக் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தன. சின்ச்சிரோக்கா என்ற ஆட்சியாளரின் ஆட்சிக் காலத்தில் 'கோரிக்கன்வா' என்ற பெரும் கோவில் ஒன்று சூரியனுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

## விஞ்ஞான அறிவு

'இன்க்கா' மக்கள் மருத்துவ விஞ்ஞானம் குறித்து விசேட அறிவாற்றலைப் பெற்றவர்களாக இருந்துள்ளனர். அவர்கள் மண்டையோடு தொடர்பிலான சத்திர சிகிச்சையினை மேற்கொண்டதற்கான சான்றுகள் உள்ளன. அவர்கள் கொக்கோ இலைகளைப் பயன்படுத்தி பசி மற்றும் வலி என்பனவற்றைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். இத்தாவரங்களை இன்றும் அந்தீஸ் பகுதிகளில் காணமுடியும். மேலும் உடற் சக்திக்காக இவற்றை அவர்கள் உட்கொண்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

## யுத்த நடவடிக்கைகள்

'இன்காக்கள்' எப்பொழுதும் ஏனைய இன மக்களுடன் யுத்தம் செய்வதில் முனைப்புக் காட்டினர். அதேபோன்று அவர்கள் பலரக ஆயுதங்களையும் பயன்படுத்தினர். 'இன்க்கா' படையினர் மிகவும் பலம் பெற்றவர்களாக திகழ்ந்தனர். சாதாரண பொதுமக்களையும், விவசாயிகளையும் யுத்தத்திற்காக படையினர் மிகத் திறமையாகத் தயார்ப்படுத்தினர். அனைத்துவித இன்க்கா ஆண்களும் ஒரு முறையாவது படை வீரனாகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

## கலைகள்

இன்க்கா நாகரிகத்தில் 'கும்பல்' எனப்படும் தொழிற்துறை முன்னேற்றம் அடைந்திருந்தது. அலங்கார வேலைப்பாடுகள் மிகுந்த ஆடைகளை நெய்தல் தொடர்பாகவும் அவர்கள் விசேட திறன் பெற்றிருந்தனர். அத்துடன், அவர்களின் கட்டட நிர்மாணத்திலும் விசேட தன்மையினைக் காண முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - I

பெயர்: ..................................................

1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கீறிடுக.

★ *1-2 வரையான வினாக்களில், ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள மூன்று அடைப்புகளிலும் இரு அடைப்புகளிலுள்ள உருக்களுக்கிடையே ஓர் ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பிலுள்ள உருக்களுக்கிடையே ஒற்றுமை இல்லை. அதனைத் தெரிவுசெய்க.*


01) 

1. 2. 3.

02) 

1. 2. 3.

03) பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதி எது?




1. 2. 3.

04) கீழுள்ள தரவிற்குப் பொருத்தமாக அமையும் பழம் எது? பொருத்தமான உருவில் அடையாளம் இடுக.

மிகவும் சுவையானது;
பற்றையில் தோன்றும்;
மஞ்சள் நிறம்.



1. 2. 3.

05) 


இங்கு தரப்பட்டுள்ள கம்பியினால் ஆக்கப்பட்ட சட்டத்தைப் போன்று ஐந்து சட்டங்கள் தயாரிக்கத் தேவையான கம்பியின் நீளம் யாது?

1. 12cm 2. 24cm 3. 60cm

06) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடை;

| | | |
|---|---|---|
| 7 | 12 | 17 |
| 12 | 17 | 22 |
| --- | 22 | 27 |

1. 16 2. 17 3. 21


07) [2|4|6] [5|7|9] [8|10|12] ................ வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடை;

1. [10|12|14] 2. [11|13|15] 3. [11|14|16]

08) 1, 2, 3, 4, 5 ஆகியவற்றிற்கு முறையே A, B, C, D, E என்னும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய;

ABC
+CAB
———— விடையாக அமைவது;

1. DCA 2. DCE 3. DCC

09) 
இத்திண்ம உருவிலுள்ள மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது?

1. 10 2. 8 3. 12

10) (2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10) தரப்பட்டுள்ள எண்களில் மிகச் சிறிய ஒற்றை எண்ணையும் மிகப் பெரிய ஒற்றை எண்ணையும் பெருக்கும்போது கிடைக்கும் விடை யாது?

1. 20 2. 30 3. 27




11) 4 5 7 வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்கள் யாவை?
3 .... 4
1 .... 3

1. 2, 3 2. 1, 3 3. 1, 6

★ *2 ✡ 3 ÷ 3 # 3 இக்கோவையை அவதானித்து, அடுத்து வரும் இரு வினாக்களுக்கும் விடை தருக.*

12) ✡ என்ற குறியீடானது, எதற்காக குறிக்கப்பட்டுள்ளது?

1. கூட்டல் 2. கழித்தல் 3. பெருக்கல்

13) # என்ற குறியீடானது, எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

1. கூட்டல் 2. கழித்தல் 3. பெருக்கல்

14) 4m நீளமும் 3m உயரமும் உள்ள சுவருக்குப் பூச 2 லீற்றர் நிறப்பூச்சு தேவைப்படுகின்றது. 2m நீளமும் 3m உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் நிறப்பூச்சு தேவை?

1. 1 லீற்றர் 2. 2 லீற்றர் 3. $\frac{1}{2}$ லீற்றர்

15) ஒரு சதுரக் காணியின் ஒரு பக்கத்தில் 10 தூண்கள் காணப்பட்டன எனின், அக்காணியைச் சுற்றி வர நடப்பட்டுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?

1. 40 2. 38 3. 36

16) $\frac{3}{10}$ என்ற பின்னத்தை தசம எண்ணில் தருக.

1. 3.3 2. 0.3 3. 0.03

17) இன்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் 13 ஆம் திகதி ஆயின், சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?

1. 4 ஆம் திகதி 2. 6 ஆம் திகதி 3. 11 ஆம் திகதி

18) 20 இன் அரைவாசியின் $\frac{1}{2}$ உடன் 3 ஐக் கூட்டும்போது கிடைக்கும் விடை;

1. 8 2. 10 3. 13

19) சீதாவிடம் உள்ள பணத்தில் 4 மடங்கு கமலாவிடம் உண்டு. சீதாவிடம் உள்ள பணம் 12.50 எனின், கமலாவிடம் உள்ள பணம் எவ்வளவு?

1. 50.00 2. 48.00 3. 49.00

20) 10 cm இல் உள்ள மில்லிமீற்றர்களின் எண்ணிக்கை யாது?

1. 10mm 2. 100mm 3. 110mm

21) நாங்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆர்வமுடன் கல்வி ................................

1. கற்போம் 2. கற்பேன் 3. கற்பார்கள்

22) கீழே தரப்பட்டுள்ள சொற்களில், வழு உள்ள சொல் எது?

1. எண்ணெய் 2. புகழ்ச்சி 3. கவற்ச்சி

23) தன்னிடமுள்ள பணத்தை கண்மூடித்தனமாக-வீணாக செலவழிப்பவன்;


1. உலோபி 2. ஊதாரி 3. நாத்திகன்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது

# குறுக்கெழுத்துப் போட்டி



FUN'S Word-Cross Puzzle.

FILL in the small squares with words which agree with the following definitions:


2-3. What bargain hunters enjoy.
4-5. A written acknowledgment.
6-7. Such and nothing more.
10-11. A bird.
14-15. Opposed to less.
18-19. What this puzzle is.
22-23. An animal of prey.
26-27. The close of a day.
28-29. To elude.
30-31. The plural of is.
8-9. To cultivate.
12-13. A bar of wood or iron.
16-17. What artists learn to do.
32-33. Fastened.
10-18. The fibre of the gomuti palm.
6-22. What we all should be.
4-26. A day dream.
2-11. A talon.
19-28. A pigeon.
F-7. Part of your head.
23-30. A river in Russia.
1-32. To govern.
33-34. An aromatic plant.
N-8. A fist.
24-31. To agree with.
3-12. Part of a ship.
20-29. One.
5-27. Exchanging.
9-25. To sink in mud.
13-21. A boy.

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றுக் கட்டங்களை நிரப்புவது என்பது மிகவும் மகிழ்ச்சியானதும் பொழுதுபோக்கு அம்சமுமாகும். அறிவு மற்றும் தர்க்கத்திறன் என்பனவற்றுடன் இந்த புதிர்ப் போட்டி தொடர்புபட்டுள்ளது. சிறுவர் முதல் பெரியோர் வரை விரும்பும் குறுக்கெழுத்துப் போட்டியின் ஆரம்ப வரலாற்றை அறிந்துகொள்ள நீங்கள் விரும்புகின்றீர்களா?

குறுக்கெழுத்துப் போட்டியின் ஆரம்பம் 13 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்துள்ளது. 'நியூயோர்க் வேர்ல்ட்' (Newyork World) என்ற பத்திரிகையில் சேவையாற்றிய ஆத்தர்வென் (Arthur Wynne) என்ற ஊடகவியலாளரின் படைப்பாகவே இது கருதப்படுகின்றது.

நியூயோர்க் வேர்ல்ட் பத்திரிகையின் வாராந்த காட்டூன் பகுதிகளையும், புதிர்ப் போட்டிகளையும் தயாரிப்பதே ஆத்தர் வெயினின் பணியாகும். அந்தப் பகுதியினை fun page என்று கூறுவர். சொற்கள் புதிர்,மறைமுகப் பொருள் தரும் விடயங்கள், எழுத்து தொகுதிகள், கோடுகளை இணைக்கும் ஓவியங்கள் என்பன இந்த பக்கத்தில் உள்ளடங்கியிருந்தன.






ஓர் நத்தார் தின காலத்தில் அப் பகுதியில் புதிய விடயம் ஒன்றை சேர்க்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது. இதன்படி அவர் மாணிக்கக்கல் வடிவத்தில் கோடுகளை வரைந்து புதிர் ஒன்றை உருவாக்கினார். அதில் முதல் குறுக்குக் கோட்டில் Fun என்று எழுதினார். எஞ்சிய பகுதிகளை வாசகர்களுக்கு நிரப்ப இடமளித்த அவர், அதனை நிரப்ப இலகுவாக்கும் பொருட்டு முதல் கோட்டுப்பகுதியிலும் இறுதிக் கோட்டுப்பகுதியிலும் சொற்கள் சிலவற்றை இணைத்தார். அதில் இலக்கங்களையும் சேர்த்தார். அந்த சொற்களை தேட இலகுப்படுத்தும் வகையில் சில குறிப்புக்களையும் அவர் வழங்கியிருந்தார்.

இதன்படி 1913 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி புதிய புதிர்ப் போட்டி நியூயோர்க் வேர்ல்ட் பத்திரிகையின் Fun Page இல் வெளியாகியது.அதனை Word-Cross என்று அழைத்தனர். அதில் இவ்வாறு ஓர் குறிப்பும் இருந்தது.

'கீழ் வரும் அர்த்தம் மற்றும் விளக்கம் என்பனவற்றுக்கு ஏற்ற வகையில் சதுரக்கட்டங்களை நிரப்புங்கள்'

இந்த புதிர்ப்போட்டி அனைவரதும் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. முதலில் Word-Cross என்று குறிப்பிடப்பட்ட இப்போட்டி பின்பு Cross-Word என மாற்றப்பட்டது. இதற்கிடையில் ஆத்தர் வெயின் மேலும்




புதிய பல வடிவங்களையும் பரீட்சித்துப் பார்த்தார். இறுதியில் செவ்வக வடிவமே பொருந்தும் விடயமாக அமைந்தது.

இதற்கிடையில் 1924 இல் கொலம்பியாவில் பத்திரிகையியல் பாடசாலையில் பட்டம் பெற்ற 'டிக் சைமன்' (Dick Simon) மற்றும் லின்கன் சுஸ்டர் (Lincoin Schuster) ஆகியோர் இணைந்து அது வரை பிரசுரமான குறுக்கெழுத்துப் போட்டிகளை புத்தகமாக தொகுத்து வெளியிட்டனர். இது பெரும் வரவேற்பைப் பெற்றது. நியூயோர்க் வேர்ல்ட் Fun புதிர்ப் போட்டி பின்னர் அனைத்துப் பத்திரிகைகளுக்கும் பரவியது.

இன்றும் உலகளாவிய ரீதியில் குறுக்கெழுத்துப் போட்டி பெரும் வரவேற்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெல்லுங்கள்!

விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

16.04.2014 TOP News கேள்விக்கான விடை:
டென்மார்க்

Pen Drive வெற்றியாளர்:
மர்யம் அமீர்,
261/1, ஹிங்குருமுதுன வீதி,
அக்குறனை.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(30.04.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
30.04.2014

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளர்ச்சியை அடக்குவதற்கு சென்ற எஹலப்பொலை

கிளர்ச்சிக்காரர்களின் எதிர்பார்ப்பு என்னதென்று ஆராயும்படி எஹலப்பொலைக்கு 'டொய்லி' கட்டளையிட்டார். அந்த காரியத்தை பிரதானி மொல்லிகொடைக்கு வழங்கியிருந்தால் கிளர்ச்சியை அடக்கக்கூடியதாக இருந்திருக்கும்.

எனினும், எஹலப்பொலை அவ்வாறில்லை. தனது பலத்தை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக இதனை எடுத்துக்கொண்டான். அவனுக்கு வழியில் மாத்தளை இரத்வத்தை திசாவையை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த திசாவை எஹலப்பொலையின் பரம எதிரியாகிய மொல்லிகொடையின் மாமனார் ஆவார்.

எஹலப்பொலை தனக்கு இரத்வத்தை அதிகளவு கௌரவத்தை வழங்கவில்லை என குற்றஞ்சாட்டினான். அவனின் கௌரவ இலச்சினைகளைக் கழட்டினான். பகிரங்கமாக அவமானப்படுத்தினான். பின் நாலந்தைக்குச் சென்றான். திருகோணமலையில் இருந்து வரும் ஆள்பதி பிரௌன்றிக் மற்றும் அவரின் மனைவியைச் சந்திப்பதற்காகவே எஹலப்பொலை யானை மற்றும் பரிவாரங்களுடன் அங்கு ஊர்வலமாகச் சென்றான். இதற்கிடையில் கிளர்ச்சி குறித்து ஆள்பதி அறிந்துவைத்திருந்தார். அது குறித்து எஹலப்பொலைமீதும் அவருக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அதனால் பரிவாரங்களுடன் எஹலப்பொலை இங்கு வந்திருப்பது கொடிய நோக்கத்துடனேயே என்ற சிந்தனை ஆள்பதிக்கு ஏற்பட்டது.

உண்மையில் அத்தகைய எந்தவொரு நோக்கமும் எஹலப்பொலைக்கு இருக்கவில்லை. தனக்கிருக்கும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் காட்ட வேண்டும் என்ற நோக்கம் மாத்திரமே அவனுக்கு இருந்தது. அத்தோடு மொல்லிகொடையின் நண்பனும் தனது எதிரியுமாகிய மில்லேவ வெல்லஸ்ஸ திசாவையை அப்பதவியில் இருந்து நீக்கும்படி எஹலப்பொலை ஆள்பதியிடம் வேண்டுகோள் விடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் மெஜிக் செய்யலாம்

## அந்தரத்தில் மிதக்கும் குவளை

புதிதாக முதன்முதல் மெஜிக் செய்பவர்களுக்குகூட இலகுவானதாக இருக்கும் மெஜிக் ஒன்றையே இன்று நாம் செய்யப்போகிறோம். இங்கு ஈர்ப்பு விசைக்கு எதிராக ஒரு குவளையொன்று அந்தரத்தில் மிதக்கப் போகின்றது. அதற்காக கடதாசி குவளையொன்றில் நகத்தினால் துளை ஒன்றை இட்டு விரலை அதனுள் நுழைத்து குவளையைப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

**தேவையான பொருட்கள்:**

கடதாசிக் குவளை ஒன்று



**1 ஆவது படிமுறை:**




வெளியில் ஊடுருவித் தெரியாத கடதாசிக் குவளை ஒன்றை எடுங்கள். அதனை பார்வையாளர்களுக்கு நன்கு காட்டுங்கள்.

**2 ஆவது படிமுறை:**


இப்பொழுது நீங்கள் வெற்றுக் குவளையினை உங்களது சிறப்பான மெஜிக் சக்தியின்மூலம் அந்தரத்தில் மிதக்கச் செய்யப் போகின்றீர்கள். இதற்காக குவளையைப் பற்றி பார்வையாளர்களுக்கு விபரித்து விட்டு நீங்கள் மேற்கொள்ளப்போகும் உபாயத்தை அவர்களுக்குத் தெரியாமல் செய்ய வேண்டும். அதற்காக அவர்களின் கவனத்தினை நீங்கள் திசைதிருப்புங்கள்.

**3 ஆவது படிமுறை:**

பேசிக்கொண்டிருக்கும்போதே உங்களுக்கு வழக்கப்பட்ட கையின் பெருவிரலினால் குவளையின் நடுவில்



சிறு துளையை இட்டுக்கொள்ளுங்கள். இதனை யாருக்கும் தெரியாமல் நீங்கள் செய்ய வேண்டும். அதன்பின்பு அந்த துளையினுள் விரலினை ஓரளவிற்கு மெதுவாக நுழைத்துக்கொள்ளுங்கள்.



குவளையை அப்பொழுது தான் உங்களால் தேவையானவாறு இயக்கிக்கொள்ள முடியும். ஆனால், இதனை பார்வையாளர்கள் அறிய மாட்டார்கள்.

**4 ஆவது படிமுறை:**





உங்களது மெஜிக் பலத்தினால் வெற்றுப் பேப்பர் குவளை இப்பொழுது அந்தரத்தில் மிதக்கும். உங்களது கையில் உள்ள குவளையினைச் சற்றுத் தூரம் வரை எடுத்துச் சென்று பின்பு இரு கைகளால் பிடித்துக் கொள்ளுங்கள். மீண்டும் கைகளை கீழே கொண்டு வந்து அதனை மீண்டும் செய்து காட்டுங்கள்.

**ரகசியம்:**

உங்களது விரலினை இயலுமானவரை குவளையிலிருந்து விலக்கி வைத்துக் காட்டுங்கள். அப்பொழுது உங்கள் மெஜிக் மீது சந்தேகம் வராது. மேலே உயர்த்தப்படும் கோப்பையினை பிடிக்கும்போது அவ்வாறு விரித்து வைத்துக் கொண்டிருக்கும் விரல்களை ஒன்றுபடுத்தி ஏதோவொன்றினை பிடிப்பதைப் போன்று காட்டவேண்டும்.

இந்த மெஜிக்கிற்கு உங்களது அசாத்திய நடிப்புத் திறமையும், மிகத் திறமையாக விரல்களை அசைக்கும் ஆற்றலும் அவசியமாகும்.

மெஜிக் மாமா

# தெரிந்து கொள்வோம்



* சுவிற்சர்லாந்து எப்போது ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றது?
  1990 இல்
* உலகின் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி எது?
  ஏஞ்சல் நீர்வீழ்ச்சி



* 'ப்ளேட் ரன்னர்' என்று அழைக்கப்படும் விளையாட்டு வீரர் யார்?
  'ஒஸ்கார் பிஸ்டோரியஸ்' என அழைக்கப்படும் இரு கால்களையும் இழந்த செயற்கைக் கால் பொருத்தி ஓடி சாதனை படைத்தவர்.
* முதன்முதலில் விமானத்தில் பறந்த ஜனாதிபதி யார்?
  அமெரிக்க ஜனாதிபதி ஃப்ரேங்க்ளின் ரூஸ்வெல்ட், ரைட் சகோதரர்களின் விமானத்தில் பிரயாணம் செய்த முதல் ஜனாதிபதியாவார்
* ஐரோப்பாக் கண்ட நாடுகள் எவ்வாறு பிரித்து புவியியல் ரீதியில் அழைக்கப்படுகின்றன?
  i. ஸ்கெண்டிநேவிய நாடுகள்
  ii. போல்கன் நாடுகள்
  iii. நோர்டிக் நாடுகள்
  iv. பென்லக் நாடுகள்
  v. பொல்ஸ்டிக் நாடுகள்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5636
கே.சந்தோஷ், ப்ராஸ் ஃபௌண்டர் வீதி, கொழும்பு-13.


அங். இல: 5637
எஸ்.விலோஜனா, வெஞ்சர், நோர்வூட்.


அங். இல: 5638
மு.ஜசிதரன், கடற்கரை வீதி, திருகோணமலை.


அங். இல: 5639
எஸ்.பிரகாசினி, நாவலர் வீதி, வவுனியா.


அங். இல: 5640
சி.றம்ஜித்தா, 2 ஆம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம்.


அங். இல: 5641
எஸ்.கிதர்ஷனா, நீர்கொழும்பு வீதி, வத்தளை.


அங். இல: 5642
ச.கோபிதன், 2 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.


அங். இல: 5643
கு.தர்சன், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.


அங். இல: 5644
கு.கிறிஸ்ரிப் பிரியா, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.


அங். இல: 5645
ஏ.மிதுர்சன், போதிராஜராம மாவத்தை, கொழும்பு-10


அங். இல: 5646
அல் ஜாபீர் அல் இமாத், அண்ணல் நகர், கிண்ணியா-03


அங். இல: 5647
எம்.கே.அஹமட், ஸ்ரீ சித்தார்த்த வீதி, கிருலப்பனை.

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..........

முகவரி: ..........

..........

பாடசாலை: ..........

வகுப்பு: ..........

திகதி: ..........

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாயின் நாசி

# நன்றியுள்ள மிருகம்

பண்டைய காலம் தொட்டு பாதுகாப்புக்காகவும் செல்லப் பிராணியாகவும் வேட்டையாடுவதற்காகவும் பண்ணைகளில் கால்நடைகளைப் பாதுகாக்கும் உதவியாளர்களாகவும் மனிதர்கள் நாய்களை வளர்த்து வருகின்றனர். தம்மை வளர்ப்பவர்களு டனும் தம்மீது அன்பு செலுத்துபவர்களுக்கும் அடிபணிந்து நன்றியுடன் நடந்துகொள்ளும் இந்த நன்றியுள்ள மிருகம் பற்றி நாம் அறிந்தவையும் அறியாதவையும் ஏராளம்.

## உங்களுக்குத் தெரியுமா?

* நாயின் முக வடிவத்தைக் கொண்டு அதன் ஆயுட்காலத்தைக் கண்டறிய முடியும். ஓநாய்களைப் போன்று நீண்ட முக அமைப்பு கொண்ட நாய்களுக்கு நீண்ட ஆயுள் இருக்கும். 'புல்டோக்' போன்ற மிகவும் சிறிய முகம் கொண்ட நாய்களுக்கு ஆயுட்காலம் குறைவாகும்.
* நாய்க்குட்டியொன்று பிறக்கும்போது, கண்பார்வைத் திறன் அற்றதாகவும் செவிப்புலன் அற்றதாகவும் பற்கள் இன்றியுமே பிறக்கின்றது.
* நாய்க்குட்டிகளுக்கு 18 பற்களும் நன்கு வளர்ச்சியடைந்த நாய்களுக்கு 42 பற்களும் உள்ளன.
* உலகில் சராசரியாக 400 மில்லியன் நாய்கள் உள்ளன. ஏராளமான நாய்கள் அமெரிக்காவிலேயே உள்ளன. இரண்டாவதாக பிரான்ஸிலேயே அதிக நாய்கள் உள்ளன.
* நாய்களுடன் கொஞ்சி விளையாடுவதனால், மனிதர்களின் இரத்த அழுத்தம் குறைவடைவதாகக் கூறப்படுகின்றது.
* சுமார் 14 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாய்கள் மனிதர்களுடன் பழக ஆரம்பித்துள்ளன.
* நாய் ஒன்று மணித்தியாலத்திற்கு சுமார் 19 மைல் வேகத்தில் ஓடும் ஆற்றல் கொண்டது. உலகில் உள்ள மிகவும் வேகமாக ஓடக்கூடிய நாய்கள் 'க்ரேஹவுண்ட்' இன நாய்களாகும். இவற்றால் மணித்தியாலத்திற்கு 45 மைல் வேகத்தில் ஓட முடியும்.
* சிறுநீர் கழித்தல் என்பது நாய்களுக்கிடையிலான ஒரு தொடர்பாடல் முறையாகும்.
* மிகவும் புத்திசாலித்தனம் மிக்க நாய் இனங்களாக போடர் கொலீ மற்றும் பூட்ல் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். குறைவான அறிவு மட்டம் கொண்ட நாய்களாக ஆஃப்கன் ஹவுண்ட் மற்றும் பெசன்ஜி இனங்களைக் கருதலாம்.
* நாயொன்று உறக்கத்தில் இருக்கும்போது, தனது கால்களை அசைக்குமாயின் அது கனவு காண்கின்றது என்று அர்த்தமாகும்.
* நாய்கள் தமது நாக்கினை வெளியே நீட்டிக்கொண்டு மூச்சிரைக்கக் காரணம், தமது உடலைக் குளிர்மைப்படுத்தவே ஆகும் என்று கூறப்படுகின்றது.






* நாய்களின் இதயம் நிமிடத்திற்கு 120 தடவைகள் துடிக்கின்றன. மனிதரின் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு 80 தடவைகள் மட்டுமே!
* கழுதைகள், குதிரைகள், ஆடுகள், மாடுகள், பூனைகள், கோழிகள் ஆகியவற்றை வீட்டு விலங்குகளாக வளர்ப்பதற்கு முன்பே, நாய்கள் வீட்டு விலங்காக வளர்க்கப்பட்டிருக்கலாம் என பெரும்பாலான விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.
* விரல் அடையாளத்தினைக் கொண்டு மனிதனை அடையாளம் காண முடிவதைப் போன்று, நாய்களின் ந... உள்ளன. அவற்றினூடாக நாய்களை இன...
* நாய்களின் வியர்வைச் சுரப்பிகள் அ... நகங்களுக்கு இடையில் அமைந்துள்ளன.
* எவ்வளவுதான் செல்லப்பிராணியாக... மில்லியன் பேர் நாய்க்கடிக்கு உள்ளாகின்... கூறுகின்றன.

## நாய்களின் ப... வரல...


* ஓநாய்களிடமிருந்தே ... நிலையை அடைந்துள்ளன...
* பண்டைய கால எகிப்... புனிதத் தன்மை வாய்ந்த ... கருதினர்.
* பண்டைய ... கலாச... முக்கிய இடம் அளிக்கப்ப... பராமரிக்கவென பிரத்தியே... நியமிக்கப்பட்டிருந்தனர்.
* பீகிங்கீஸ் நாய்கள் சீன... காலம் வணக்கத்துக்குரிய ... அரசிகள் மற்றும் இளவரசிக... அவர்களின் நீளமான உ... மறைந்திருக்கக்கூடியவாறா... இனமொன்றும் இருந்துள்ள...
* செல்லப் பிராணிகளாக நாய்களை வளர்ப்பது பண்டைய ஈரானில் தடைசெய்யப்பட்டிருந்தது. அங்கு காவல் நாய்களையும் வேட்டை நாய்களையும் மட்டுமே வீடுகளில் வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது.
* அதிக எண்ணிக்கையிலான நாய்களை வைத்திருந்த பெருமை



புராதன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# ... பற்றி அறிந்ததும் அறியாததும்

... நாய்களின் நாசியிலும் அடையாளங்கள் ...ாய்களை இனங்காண முடியும்.
...சுரப்பிகள் அவற்றின் பாதங்களின் ...மைந்துள்ளன.
...ப்பிராணியாக இருந்தாலும், வருடாந்தம் 5 ...5 உள்ளாகின்றனர் என்று அறிக்கைகள்

## ...களின் பண்டைய கால வரலாறு

...ளிடமிருந்தே நாய்கள் பரிணாம வளர்ச்சி ...டைந்துள்ளன.
...டைய கால எகிப்தியர்கள் நாய்களை ...மை வாய்ந்த விலங்கினமாகக்

...டைய ... கலாசாரத்... ம் நாய்களுக்கு ...ம் அளிக்கப்பட்டுள்ளது. நாய்களைப் ...பன பிரத்தியேக சேவையாளர்கள் ...ட்டிருந்தனர்.
...ல் நாய்கள் சீன விகாரைகளில் நீண்ட ...க்கத்துக்குரிய கடவுளாகக் கருதப்பட்டன. ...றும் இளவரசிகளின் பாதுகாப்புக்கென ...நீளமான உடைகளின் ஓரங்களில் ...க்கக்கூடியவாறான சிறிய பீகிங்கீஸ் நாய் ...யும் இருந்துள்ளது.

குப்லாய் கான் சக்கரவர்த்தியினை சாரும். அவரிடம் 5 ஆயிரம் நாய்கள் இருந்துள்ளன.

✱ முதன்முதல் விண்வெளிக்கு சென்று வந்த விலங்கினமாக பெயர் பதித்திருப்பது 'லைக்கா' என்ற ரஷ்ய நாட்டு நாயாகும். 1957 இல் இந்த பெண் நாய் விண்வெளிக்கு சென்றதோடு, அங்கேயே இறந்துவிட்டது.

## மோப்ப உணர்வு

✱ மனிதர்களைவிட நாய்களுக்கு ஆயிரம் மடங்கு மோப்பசக்தி உண்டு. மனிதர்களின் நுகர்ச்சித்திறனைவிட நாய்களின் நுகர்ச்சித்திறன் மிக அதிகமாகும். மனிதர்களுக்கு 5 மில்லியன் நுகர்ச்சி உணர்வு வாங்கிகளே உள்ளன. ஆனால், நாய்களுக்கு 125-220 மில்லியன் நுகர்ச்சி உணர்வு வாங்கிகள் உள்ளன.

✱ மருத்துவர்களால் இனங்காண முடியாத சிறியளவிலான புற்றுநோய்க் கட்டிகளைக்கூட தமது நுகர்ச்சித் திறன் மூலம் அறிந்துகொள்ளும் ஆற்றல் நாய்களுக்கு உள்ளன.

## செவிமடுத்தல்

✱ மனிதர்களைவிட பல மடங்குகள் செவிமடுக்கும் ஆற்றல் நாய்களுக்கு உண்டு. அதாவது, 40Hz தொடக்கம் 60,000Hz ஒலியை செவிமடுக்கும் ஆற்றல் நாய்களுக்கு உண்டு.

## பார்த்தல்

இரவில் மந்தமான ஒளியிலும் நாய்களுக்கு நன்கு கண்தெரியும். நிறக்குருடு உள்ள மனிதர்களைப் போன்றே அவற்றுக்கும் நிறங்கள் புலப்படும். நீலம் பச்சை, மஞ்சள், சாம்பல் ஆகிய நிறங்கள் நாய்களுக்கு நன்கு தெரியும் எனக் கருதப்படுகின்றது.



புராதன சீனாவில் காணப்பட்ட நாயொன்று.



புராதன ரோமானிய மட்பாண்டங்களில் காணப்பட்ட நாய் உருவங்கள்.

## நாய் இனங்கள் சில...

✱ **பீக்ல்(Beagle):** முயல்களை வேட்டையாடவென 16 ஆம் நூற்றாண்டில் 'பீக்ல்' இன நாய்கள் பயன்படுத்தப்பட்டன.

✱ **பொக்சர் (Boxer):** 19 ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியில் இவ்வின நாய்கள் முயல்கள், மான்கள், கரடிகள், பைசன் மாடுகள் என்பனவற்றை துரத்திச் செல்லவும், வேட்டைக்காரர்கள் வரும்வரை அவற்றை தடுத்து வைக்கவும் விசேட ஆற்றல் பெற்றவையாக இவை இருந்துள்ளன.

✱ **புல்டோக் (Bulldog):** 16 ஆம் நூற்றாண்டில் பிறந்த 'புல்டோக்' இன நாய்களைவிட, இன்று காணப்படும் புல்டோக் இன நாய்கள் வேறுபட்டவையாகும்.



✱ **போடர் கொலீ (Border Collie):** இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து நாய்களின் கலப்பின நாய்களே இந்த 'போடர் கொலீ' நாய்களாகும். ஆடுகள், மாடுகளைப் பாதுகாப்பதே இதன் பிரதான பணியாகும்.



லைக்கா

✱ **ச்சிஹுஹுவா ஹுவா (Chihuahua):** இந்த நாய்களின் சந்ததி நிரந்தரமற்றது. மெக்சிகோவின் ஒரு பிராந்தியத்தின் பெயரையே இதற்கு சூட்டியுள்ளனர்.

✱ **டேக்ஸ்ஹுன்ட் (Dachshund):** பொந்தில் வசிக்கும் 'பேட்ஜர்' என்ற விலங்குடன் போரிடவே இந்த நாய் உருவாக்கப்பட்டது. இவற்றின் நீளமான உடல்வாகு காரணமாக இலகுவாக பேட்ஜர் விலங்கினத்தின் பொந்துக்குள் நுழையக்கூடியதாக இருந்தது.

✱ **டெல்மேஷன் (Dalmation):** யுத்தகாலத்தில் பாதுகாப்பு சேவைகளுக்காகவும் தீயணைப்புப் படைவீரர்களின் உதவிக்காகவும் வேட்டையாடுவதற்காகவும் இவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

✱ **ஜேர்மன் ஷெபர்ட் (German Shepherd):** ஜேர்மனிய வம்சாவளி நாய்களான 'ஜேர்மன் ஷெபர்ட்' இன நாய்கள் 1899 இல் ஆடு மேய்ப்பவர்களின் உதவியாளராக காணப்பட்டன. அவற்றின் புத்திசாதுர்யம் மற்றும் பலம் காரணமாக பிற்பட்ட காலத்தில் அவை பொலிஸ் நாய்களாகின.

✱ **பூடல் (Poodle):** வேட்டைக்காரர்களுக்கு உதவும் நாய் என்பதால், இந்த பெயர் இந்நாய்களுக்கு கிடைத்துள்ளது.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள், தமது ஞாபகசக்தியை தக்கவைத்துக்கொள்ள....




கல்வி கற்கும் மாணவர்களில் பலர் தாம் கற்றுக் கொள்பவற்றை அடிக்கடி மறந்துவிடும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஞாபகசக்தியை தக்கவைத்துக்கொள்ள முறையான வழிமுறைகளைப் பின்பற்றாமல் இருப்பதே இதற்கான காரணமாகும். ஆகவே, ஞாபகசக்தியை தக்கவைத்துக்கொள்ள மாணவர்களுக்கான சில ஆலோசனைகள் இதோ;

* இரவில் பாடம் படித்தபின், வேறு எந்த வேலையையும் செய்யாமல் நித்திரைக்குச் சென்றுவிடுங்கள். மறுநாள் காலை எழுந்தவுடன், வேறு எந்த வேலையிலும் உங்களை ஈடுபடுத்தாமல், இரவில் படித்தவற்றை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.


* நெடுநேரம் கண்விழித்துப் படிக்காமல், போதுமான அளவு படித்துவிட்டு, நித்திரைக்குச் சென்றால் ஞாபகசக்தி பாதிக்கப்படாமல் இருக்கும். அத்துடன், அதிகாலையில் மனம் தூய்மை, புத்துணர்வோடு இருக்கும். கடினமான பாடங்களை அந்த வேளையில் படித்தால் எளிதில் மனதில் பதிந்துவிடும்.

* ஒரு சிக்கலான பாடத்தை எவ்வளவுதான் படித்தும் மூளையில் பதியவில்லையா? இரவில் நித்திரை செய்யும் முன் அந்தப் பாடத்தை மனத்திரையில் கொஞ்சம் ஓடவிடுங்கள். மறுநாள் காலையில் அந்தப் பாடம் மனதில் ஏறக்குறைய முக்கால்வாசி பதிந்திருப்பதை உணர்வீர்கள். மீதி கால் பாகத்தை மீண்டும் ஒருமுறை வாசிப்பதன் மூலம் படித்து முடித்துவிடலாம்.



* நாம் உண்ணும் உணவுக்கும் ஞாபகசக்திக்கும் தொடர்பு உண்டு. புரதம் அதிகம் அடங்கியுள்ள கீரைவகைகள், காய்கறிகள், கிழங்குகள் போன்றவற்றை அதிகம் உண்டால் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும். குறிப்பாக, வல்லாரைக் கீரை நினைவாற்றலை அதிகரிக்கும்.

* பொதுவாக, எந்தவொன்றையும் எழுத்தில் காண்பதை விட படமாகக் கண்டால் அதை நாம் மறந்துவிடுவது குறைவு. எனவே, பாடம் தொடர்பான வரைபடங்களை அடிக்கடி மீட்டிப் பார்க்க வேண்டும். வரைந்து பார்க்கவும் வேண்டும்.



* எல்லாவற்றுக்கும் மேலாக, இருக்க வேண்டிய முக்கியமான விடயம்; குறித்த பாடம் மீதான ஈடுபாடு ஆகும். எனவே, படிப்பதை கடமையாக மேற்கொள்ளாமல், விருப்பமான விடயமாக மாற்றிக்கொண்டால் நிச்சயம் படிக்கும் விடயம் எதுவும் மறக்காது.

* ஒரு கேள்விக்கான பதிலைப் போல மற்றொரு கேள்வியின் பதில் இருந்தால், அதை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதேபோல அக்கேள்விகளின் விடைகள் நேர்-எதிர்மறையாக இருந்தாலும் அந்த இரண்டையும் தொடர்புக்குள்ளாக்கி எம்மால் நினைவுக்குக் கொண்டுவர முடியும். எமக்குப் புரிகிற மாதிரியான தொடர்புமுறையை ஏற்படுத்திக்கொண்டால் போதும்.

* முறையான மீள் பார்வை (ரிவிஷன்), நல்ல ஞாபகசக்தியையும் கற்றலை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரும் ஆற்றலையும் நிச்சயம் தரும்.

* பெரிய பாடங்களை படிக்கும்போது, அவை தொடர்பான சிறு குறிப்புகளை எழுதி வைத்து மீட்டிப் பார்ப்பதும் ஞாபகசக்தியை அதிகரிக்கும்.

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



எம்.சியாம், 72 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவனாவார்.



எம்.ரிஸ்னி, 71 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவனாவார்.



மாத்தளை இந்து தேசிய கல்லூரியைச் சேர்ந்த வ.தனுகுமார், 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.முஸ்னா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களு/அல்-ஹஸனியா மகா வித்தியாலய மாணவியான இவர், முனஸ்சிர்-நுஹறா தம்பதியரின் புதல்வியாவார்.



ஞா.கேமிதா கிறிஸ்மந்தி, 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி மாணவியான இவர், ஞானதீபன்-மேனகா தம்பதியரின் புதல்வியாவார்.

## களு/முஸ்லிம் மத்திய கல்லூரி



சி.அப்துல் அஹ்மன், 83 புள்ளிகள்.



எஃப்.இஷ்ரத், 80 புள்ளிகள்.



கே.லக்ஷான் 78 புள்ளிகள்.



எம்.இமாத், 76 புள்ளிகள்.



எம்.நவீட், 75 புள்ளிகள்.

எம்.அக்ரம், 77 புள்ளிகள்.

வை.மொஹமட், 75 புள்ளிகள்.

ஆர்.அஹமட், 75 புள்ளிகள்.



எஃப்.சில்மியா, 73 புள்ளிகள்.



எஃப்.ருகையா, 70 புள்ளிகள்.

ஐ.யாசிர், 73 புள்ளிகள்.

எஃப்.யூசுப் அமான், 73 புள்ளிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிர்வாக தொடர்பாடல் வடிவமைப்பு

ஊடக பாடநெறி 83

நிறுவனம் ஒன்றில் இடம்பெறுகின்ற செயற்பாடுகளில் தொடர்பாடல் செயன்முறையும் முக்கியம் பெறுகின்றது. நிறுவனத்தின் பணியாளர்களிடையேயும், அனைத்துப் பிரிவினர்களுக்கிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும், கருத்துப் பரிமாற்றங்களை ஒருங்கிணைக்கவும் தொடர்பாடல் அடிப்படையாகின்றது. நிறுவனம் ஒன்றின் முக்கியத்துவம் உள்ளக அடிப்படையிலும், வெளியக அடிப்படையிலும் வினைத்திறனுள்ளதாக செயன்முறைப்படுத்துவதற்கு தொடர்பாடல்சார் முகாமைத்துவப் பிரயோகங்கள், தொடர்பாடல் திறன்கள் பங்களிக்கின்றன.

நிறுவனத்தின் செயற்பாடுகள் பயனுறுதி மிக்கதாக அமைய தொடர்புசார் திறன்கள் தரம்மிக்கதாக அமைதல் முக்கியமாகின்றது. நிறுவனம் ஒன்றில் இடம்பெறுகின்ற தொடர்பாடல் நிலைகளை பின்வரும் இரு பெரும் வகைப்பாட்டின் அடிப்படையில் நோக்க முடிகின்றது.





1. முறைசார் தகவல் தொடர்பு
2. முறைசாரா தகவல் தொடர்பு

## முறைசார் தகவல் தொடர்பு

குறித்த நிறுவனம் ஒன்றின் முறைசார் தகவல் தொடர்பு என வரையறை செய்யமுடியும்.

நிறுவனத்தின் தலைமை அதிகாரிகட்கும், பணியாளர்கட்கும் இடையிலான உயிரோட்டமான கருத்துப் பரிமாற்றத்தின் அடிப்படையிலேயே நிறுவன செயலொழுங்கு தீர்மானிக்கப்படுகின்றது. இங்கு தகவல் பரிமாற்றமானது, திட்டமிடப்பட்டு நன்கு ஒழுங்கமைந்த ஒழுங்கு முறைக்கு ஏற்ப இடம்பெறுகின்ற, செயன்முறைப்படுத்தப்படுகின்ற தொடர்பாடல் முறைமையை முறையில் முன்னெடுக்கப்படுகின்ற முகாமைத்துவ அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. பின்வரும் அடிப்படையில் நிறுவனம் ஒன்றில் முறைசார் தொடர்பு முறைகள் இடம்பெறுகின்றன.


1. மேலிருந்து கீழ் நோக்கிய தொடர்பு (Upward)



2. கீழிருந்து மேல்நோக்கிய தொடர்பு (Downward)
3. குறுக்குத் தொடர்பு அல்லது கிடைத்தொடர்பு (Horizontal)

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.




சரியான அடைப்புக்குள் X அடையாளம் இடுக

## தளிர்கரம்


### W மற்றும் w எழுத்துக்களை எழுதுவோம்

W w




W W W W W W W
w w w w w w w

W W W W W W W
w w w w w w w




படத்திற்குப் பொருத்தமான முதல் எழுத்தை எழுதுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் ரவி, குமார், கமல் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**රවි:** **කමල්, කුමාර් අපේ ක්‍රීඩා උත්සවයත් ළඟයි නේද?**
கமல், குமார் அப்பே க்rீடா உத்சவயத் லங்கய் நேத?
ரவி: **கமல், குமார் எங்கள் விளையாட்டுப் போட்டியும் நெருங்கி வருகிறது தானே?**

**කුමාර්:** **ඔව් රවි, තව සති තුනයි තියෙන්නේ.**
ஒவ் ரவி, தவ சதி துனய் தியென்னே.
குமார்: **ஆம் ரவி, இன்னும் மூன்று வாரங்கள்தான் உள்ளன.**

**කමල්:** **රවි, ඔයා මොන තරඟවලට ද සහභාගි වෙන්නේ?**
ரவி, ஒயா மொன தரங்கவலட்ட த சஹபாகி வென்னே?
கமல்: **ரவி, நீங்கள் என்னென்ன போட்டிகளில் பங்குபற்றுகிறீர்கள்?**

**රවි:** **මම මීටර් සීය දුවනවා. උස පනින්න ඉන්නවා.**
மம மீற்றர் சீய துவனவா. உச பனின்ன இன்னவா.
ரவி: **நான் நூறு மீற்றர் ஓடுகிறேன். உயரம் பாய்தலிலும் உள்ளேன்.**

**කමල්:** **කුමාර් ඔයා?**
குமார் ஒயா?
கமல்: **குமார் நீ?**

**කුමාර්:** **මම මීටර් දෙසීය දුවන්න ඉන්නවා.**
மம மீற்றர் தெசீய துவன்ன இன்னவா.
குமார்: **நான் இருநூறு மீற்றர் ஓட இருக்கிறேன்.**

**රවි:** **ඔයා මොනවට ද සහභාගි වෙන්නේ?**
ஒயா மொனவட த சஹபாகி வென்னே?
ரவி: **நீங்கள் எதில் கலந்துகொள்கிறீர்கள்?**

**කමල්:** **මම පාපන්දු තරඟයට සහභාගි වෙනවා.**
மம பாபந்து தரங்கயட்ட சஹபாகி வெனவா.
கமல்: **நான் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்கிறேன்.**

**රවි:** **ආ.. මමත් පාපන්දු තරඟයට සහභාගි වෙනවා.**
ஆ... மமத் பாபந்து தரங்கயட்ட சஹபாகி வெனவா.
ரவி: **ஆ... நானும் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்கிறேன்.**

**කමල්:** **අපි දැන් හොඳට පුහුණුවීම් කරන්න ඕනේ.**
அப்பி தென் ஹொந்தட்ட புஹுணுவீம் கறன்ன ஓனே.
கமல்: **நாங்கள் இப்போது நன்றாகப் பயிற்சி பெற வேண்டும்.**

**හැමදාම සවසට ක්‍රීඩා පිට්ටනියට යමු.**
ஹெமதாம சவஸட்ட க்ரீடா பிட்டனியட்ட யமு.
**எந்தநாளும் பின்னேரம் விளையாட்டு மைதானத்திற்குப் போவோம்.**

**කුමාර්:** **ඔව්, ඒක හොඳයි. අපි එහෙම කරමු.**
ஒவ், ஏக ஹொந்தய். அப்பி எஹெம கறமு.
குமார்: **ஆம், அது நல்லது. நாம் அப்படிச் செய்வோம்.**



## பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. **ක්‍රීඩා .................. ළඟයි නේද?**
2. **.................. සහභාගි වෙනවා.**
3. **සවසට ක්‍රීඩා .................. යමු.**




இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் (Present Simple Tense) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களையும் மேலும் இங்கே அவதானிப்போம்.

அ) நான் நேற்றுக் காலை கோப்பி குடித்தேன்.
I drank coffee yesterday morning.
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

ஆ) நான் ஒவ்வொரு காலையும் கோப்பி குடிக்கின்றேன்.
I drink coffee every morning.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * I drank.<br>நான் குடித்தேன். | * I drink.<br>நான் குடிக்கின்றேன். |

இ) நீ நேற்று இரவு அப்பம் சாப்பிட்டாய்.
You ate hoppers yesterday night.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) நீ ஒவ்வொரு இரவும் அப்பம் சாப்பிடுகின்றாய்.
You eat hoppers every night.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * You ate.<br>நீ சாப்பிட்டாய். | * You eat.<br>நீ சாப்பிடுகின்றாய். |

உ) நாங்கள் நேற்று கிரிக்கெட் விளையாடினோம்.
We played cricket yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஊ) நாங்கள் ஒவ்வொரு நாளும் கிரிக்கெட் விளையாடுகின்றோம்.
We play cricket everyday.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * We played.<br>நாங்கள் விளையாடினோம். | * We play.<br>நாங்கள் விளையாடுகின்றோம். |

எ) அவர்கள் நேற்று சோறும் கறியும் சமைத்தனர்.
They cooked rice and curry yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஏ) அவர்கள் ஒவ்வொரு நாளும் சோறும் கறியும் சமைக்கின்றனர்.
They cook rice and curry everyday.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * They cooked.<br>அவர்கள் சமைத்தனர். | * They cook.<br>அவர்கள் சமைக்கின்றனர். |

ஐ) அந்தச் சிறுவர்கள் நேற்று நன்றாகப் பாடினர்.
The children sang well yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஒ) அந்தச் சிறுவர்கள் எப்பொழுதும் நன்றாகப் பாடுகின்றனர்.
The children always sing well.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * The children sang.<br>சிறுவர்கள் பாடினர். | * The children sing.<br>சிறுவர்கள் பாடுகின்றனர். |

* sang- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
* sing- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற 'மே தினம்'

ஒவ்வொரு நாட்டிலும் அதன் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்வது தொழிலாளர் வர்க்கமே. ஆனால், இன்றைய நவீன உலகிலும்கூட பெரும்பாலான தொழிலாளர்கள் உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு, உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்றி ஏழ்மையான வாழ்க்கையே வாழ்கின்றனர். இத்தகைய உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவும் அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் அவர்களின் ஒற்றுமையை உலகறியச் செய்யவும் உலகின் அனைத்து நாடுகளிலும் வருடந்தோறும் மே மாதம் முதலாம் திகதி மே தினமாக அதாவது தொழிலாளர் தினமாக நினைவுகூரப்படுகின்றது.



**உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையை உணர்த்தும் தொழிலாளர் தினமே இது...**

## கைத்தொழில் புரட்சியும் தொழிலாளர் வர்க்க தோற்றமும்

18 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை பிரித்தானியாவை மையமாகக் கொண்டு ஆரம்பித்த கைத்தொழிற் புரட்சியானது, பின்னர் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவியது. பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம் என பரவி, கடல் கடந்து ஐக்கிய அமெரிக்காவிலும் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் கைத்தொழிற் புரட்சியின் தாக்கங்கள் பாரிய அளவில் உணரப்பட்டன. புராதன யுகத்தில் இருந்து மனித சமுதாயம் நவீன யுகத்திற்கு காலடி வைத்தமை கைத்தொழில் புரட்சியின் முக்கிய நிகழ்வாகும். ஆரம்பத்தில் விவசாய நிலங்கள், பண்ணைகளில் பிரபுக்களின்கீழ் பாட்டாளி மக்களாக உழைத்த வர்க்கத்தினர், கைத்தொழிற் புரட்சியின் விளைவாக, விரைவான பொருள் உற்பத்திக்காகவும் அதன்மூலம் கிடைக்கும் அபிரிமிதமான இலாப நோக்கத்திற்காகவும் தொழில் அதிபர்களால் ஈவிரக்கமற்ற முறையில் வேலை வாங்கப் பட்டனர். கைத்தொழில் புரட்சியின் பின்னர் உலகில் அதிகமான நாடுகளில் முதலாளித்துவ அமைப்புகள் தோன்றின. அந்த அமைப்புகள் தொழிலாளர்களது உழைப்பைச் சுரண்டி அவர்களை சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் அடக்கி ஆண்டன.

**1890 ஆம் ஆண்டிலிருந்து மே 1 ஆம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது**

## சர்வதேச தொழிலாளர் தின பிரகடனம்

1886 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் சிக்காகோ நகரில் முக்கிய நிகழ்வொன்று நடந்தது. 'மேர்கார்மின் ஹார்வெஸ்டர் வேர்க்ஸ்' என்ற பெயரில் தொழிலாளர்களும் ஏனைய பல தொழிற்சங்க அமைப்புகளும் இணைந்து தொழிலாளர்களுக்கு குறித்த ஒருநாள் விடுமுறை தினமாக வழங்கப்பட வேண்டும் என்றும் நாளொன்றுக்கு 8 மணி நேரம் மட்டுமே வேலை வழங்கப்பட வேண்டும் என்ற முக்கிய இரண்டு கோரிக்கைகளோடு, வேறு பல கோரிக்கைகளையும் முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதற்கு ஆதரவு தெரிவித்து மேலும் 2 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதே ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் கலந்துகொண்டனர். இதனை ஆளும் வர்க்கம் பொலிஸாரைக் கொண்டு மிக மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தி தடுக்க முற்பட்டது. அப்பொழுது ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் காயமுற்றதோடு, 8 பேர் கொல்லப்பட்டனர். தொழிற்சங்க அலுவலகம் தீக்கிரையானது. பலர் கைது செய்யப்பட்டதோடு, அவர்களில் சிலருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.

இரத்தக்கறை படிந்த போராட்டத்தின் வெற்றியாக தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையான 8 மணிநேர வேலை- 8 மணிநேர ஓய்வு - 8 மணிநேர உறக்கம் என்ற கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வை நினைவுகூரும் முகமாகவும் தொழிலாளர்களின் ஒற்றுமையையும் பலத்தையும் வலுப்படுத்தி அதனை உலகறியச் செய்யும் நோக்குடனும் 1889 இல் பிரான்ஸின் தலைநகர் பெரிஸில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச தொழிலாளர் காங்கிரஸ் கூட்டத்தில் மே மாதம் முதலாம் திகதியை தொழிலாளர் தினமாக அறிவிக்கப்பட்டதோடு, அதன்பின்னர் 1890 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கப்படலாயிற்று.





## போராட்ட வரலாற்றுப் பதிவுகள்


1794 இல் - ஐக்கிய அமெரிக்காவில் நிலையான தொழிலாளர் அமைப்புகள் தோன்றின.
1827 இல் - தொழிலாளர் கூட்டுக்குழு உதயமானது.
1832 இல் - தொழிலாளர் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
1834 இல் - பிரித்தானியாவில் நாடு தழுவிய தொழிலாளர் ஐக்கியம் உருவானது.
1848 இல் - பிரான்ஸில் எட்டு மணிநேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
1856 இல் - அவுஸ்திரேலியாவில் எட்டு மணி நேர வேலைப் போராட்டம் வலுப்பெற்றது.
1861 இல் - அமெரிக்க தொழிலாளரின் போராட்டங்களும் அதைத் தொடர்ந்து பெல்ஜியம், ஒல்லாந்து, இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் தொழிலாளர் போராட்டங்களும் உக்கிரமடைந்தன.
1886 இல் - சிக்காகோ நகரின் 'மேர்கார்மின் ஹார்வெஸ்டர் வேர்க்ஸ்' என்ற பெயரில் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டது.

## நமது நாட்டில் மே தினம்

இலங்கையைப் பொறுத்தவரையில் 1955 ஆம் ஆண்டே முதன்முதலாக அப்போதைய தொழிற்சங்க தலைவர்களில் ஒருவராகிய ஏ.ஈ.குணசிங்க தலைமையில் கொழும்பில் மே தினம் அனுஷ்டிக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டே மே தினம் ஒரு பொது விடுமுறை தினமாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், இலங்கையின் மிகப் பெரிய தொழிலாளர் வர்க்கமாகிய மலையக பெருந்தோட்ட மக்களுக்கு 1965 ஆம் ஆண்டுதான் மே தினம் ஒரு பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Volleyball எனப்படும் கரப்பந்தாட்டம்

1895 ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் ஜி.மோர்க்கன் என்பவரால் கரப்பந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 'மின்டொனெற்' என்ற பெயரில் ஆரம்பத்தில் இவ்விளையாட்டு உடல் ஆரோக்கியத்திற்காக விளையாடப்பட்டது. 1896 ஆம் ஆண்டு கலாநிதி அல்பிரட் ஜுலஸ்டட் இவ் விளையாட்டு விளையாடும் முறையைப் பார்வையிட்டு இவ்விளையாட்டிற்கு 'வொலிபோல்' எனப் பெயரிட்டார். 1900 ஆம் ஆண்டு இவ்விளையாட்டு கெனடாவிலும் அதே ஆண்டில் இந்தியாவிலும் அறிமுகம் செய்யப்பட்டது. 1916 ஆம் ஆண்டு வோல்ட்டர் சீ க மெக் என்பவர் இவ்விளையாட்டை இலங்கையில் அறிமுகப்படுத்தினார்.

1947 ஆம் ஆண்டு சர்வதேச வொலிபோல் சம்மேளனம் 14 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டு ஆண்களுக்கான முதலாவது சர்வதேச வொலிபோல் போட்டிகளும், 1952 ஆம் ஆண்டு பெண்களுக்கான முதலாவது சர்வதேச வொலிபோல் போட்டிகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1964 ஆம் ஆண்டு இருபாலாருக்குமான வொலிபோல் போட்டிகள் தனித்தனியே ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கப்பட்டமை ஒரு விசேட அம்சமாகும்.

என்.அப்ஸானா,
மட்/ஓட்டமாவடி பா.பா.ம.வித்.,

# குளிர்பானம் வேண்டாமே!



நமது உடலுக்கு சாதாரணமாக 37°C வெப்பம் தேவை. அவ்வாறு இருந்தால்தான் செரிமானம் தடைப்படாமல் நடைபெறும். ஆனால், இந்தக் குளிர்பானங்கள் 0°C அளவுக்கு குளிர்ந்திருக்கும். இதனால், உணவைச் செரிக்கச் செய்யும் என் ஸைம்கள் நீர்த்துப் போய் செரிமானம் ஏற்படும். இதனால், வயிற்றில் உணவு புளித்து, அழுகி நஞ்சாக மாறிவிடும். இந்த நஞ்சானது, குடலால் உறிஞ்சப்பட்டு உடல் முழுவதும் பரவி பலவகை நோய்களை ஏற்படுத்தும். எனவே, குளிர்பானம் அருந்துவதாக இருந்தால் சாப்பிட்ட பின் குளிர்ந்த நிலையில் அருந்தாது, அறை வெப்பநிலையில் அருந்துவதே நல்லது.

எம்.எம்.எஃப்.சுமைய்யா,
அ/இக்கிரிகொள்ளாவ
மு.ம.வித்.,
அனுராதபுரம்.



# இயற்கை

பச்சைப் பசேலாய் விரிந்த நில
உலகமாம்!
நின்று நிலைக்கும் குள
ஏரிகளாம்!
பாட்டு ஓசைகள் காதில் விழும்
அந்த பறவைகளின் இனிய
பாடல்களாம்!
தழைத்து நிலைத்துள்ள புல்
வெளிகளாம்!
பசி போக்கும் கொடை வள்ளல்
மரங்களாம்!
இவை அனைத்தும் இயற்கையே!
எப்போதும் செயற்கையல்ல....

எம்.டபிள்யூ.எப். ஸஃரா,
வல்கம, பருகந்தை, மல்வானை.




# வாழும் உணர்வு



வேடன் ஒருவன் தன்னுடைய வேட்டை நாயுடன் காட்டுக்கு வேட்டையாடப் போனான். அக் காட்டில் ஒரு முயலைப் பார்த்த வேடன் தனது நாயிடம், "நீ ஓடிப்போய் அந்த முயலைப் பிடித்து உன்னுடைய உணவாக்கிக் கொள்" என்றான். நாய் வேகமாக முயலைத் துரத்திக்கொண்டு ஓடியது.

ஆனால், முயல் அதைவிட வேகமாக ஓடி, வேட்டை நாயிடமிருந்து தப்பி சென்றுவிட்டது. தோல்வியுடன் திரும்பி வந்த நாயைப் பார்த்து வேடன் கோபம் கொண்டான். "உனக்கு வேகமாக ஓடி, இரையைப் பிடிக்கக் கொடுத்த பயிற்சியெல்லாம் என்னவாயிற்று? ஒரு சின்ன முயலிடம் தோற்றுவிட்டாயே" என்று திட்டினான்.

உடனே, நாய், "நான் ஓடியது என்னுடைய ஒரு வேளை உணவுக்காக. ஆனால், அந்த முயல் ஓடியதோ தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக" என்றது. எமது நோக்கமும் முயற்சியும் தீவிரமானதாக இருந்தால், எம்மையும்விட வலியவனவற்றையும் ஜெயிக்கலாம். கொல்லும் உள்ளுணர்வை விட வாழும் உள்ளுணர்வே பெரிது.


## மாகாணங்களுக்கு உரித்தான மலர்கள் (Provincial Flowers)

| | |
|---|---|
| 01. மேல் மாகாணம் (Western Province) | - வெண் தாமரை |
| 02. தென் மாகாணம் (Southern Province) | - ஹுன் போவிட்டியா |
| 03. வடமேல் மாகாணம் (Northwestern Province) | - எட்டேரியா |
| 04. வடமத்திய மாகாணம் (North Central Province) | - எஹெல மலர் |
| 05. ஊவா மாகாணம் (Province of UVA) | - குருளராஜ மலர் |
| 06. மத்திய மாகாணம் (Central Province) | - மவஹரன் பூ |
| 07. சப்பிரகமுவ மாகாணம் (Province of Sabaragamuwa) | - வெசக் மலர் |
| 08. வடக்கு மாகாணம் (Northern Province) | - மல்லிகை |
| 09. கிழக்கு மாகாணம் (Eastern Province) | - அல்லி |

ஜே.பாத்திமா சிபானா,
.../வ/தெல்தெனிய மு.வித்.,
லெகொல்ல, கென்கங்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 83




### மேலிருந்து கீழ்

01. நித்திரை.
02. நவரத்தினங்களில் ஒன்று.
03. பிரதியுபகாரம்.
05. இங்கு பூக்கள் பூத்துக் குலுங்கும். (தலைகீழ்)
07. கறையான், பாம்பு என்பனவற்றின் வசிப்பிடம்.
08. 'நீராடு'. (தலைகீழ்)


### இடமிருந்து வலம்

01. அரண்மனையின் மேல் மாடி.
04. சூரியன் மறையும் நேரம்.
05. (இலங்கையில்) பகல் நேர பிரதான உணவு. (மாறியுள்ளது)
06. இதன் சாற்றைக் குடித்து சக்கையை துப்புவர்.
08. உயிர் பிரியும் நேரம். (மாறியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 82 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | ணி | க் | கை | | 2 கு |
| லா | | | ன | | டை |
| 3 வ | லை | | ப | | |
| தி | | 4 பு | ப் | டு | 5 அ |
| | 6 கு | ளி | ர் | | ற |
| 7 பா | கை | | 8 சூ | ட | ம் |

## '8' ஐ எவ்வாறு பெறலாம்?




## 1 பிழை திருத்தி எழுதுக

01. இளுபரி - ..........................................
02. குறல்வலம் - ..........................................
03. அருவறுபு - ..........................................
04. நிலட்பபடம் - ..........................................
05. வெற்ரிடம் - ..........................................




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 07.05.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 22
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=
பரிசுப் பொதி

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.


## 3 உரிய நிழற் படத்துடன் இணைக்க



## அடுத்து வர வேண்டியது எது? 2




Sponsored by




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 20 விடைகள்

போட்டி: 01 போட்டி: 03




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 20 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
ஷஹான் பஸீம், எஹலியகொட.

**2ஆம் பரிசு**
சி.சிவந்திகா, வெள்ளவத்தை.

**3ஆம் பரிசு**
எம்.அப்ரி, அக்கரைப்பற்று.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ம.அருண், திருகோணமலை.
- சம்சீடீன், தர்கா நகர்.
- சஸ்ரா அனஸ், திஹாரி.
- செ.கௌசிகன், பருத்தித்துறை.
- சாரா இஷாக், மல்கமன்தெனிய.
- எஃப்.நிஸ்பானூ, மருதமுனை-03.
- பிரெசில்லா, உடுவர.
- வை.ஜான்சி, கிருலப்பனை.
- எம்.நிஷாட், வெலிகம.
- இ.பிரசாத், ஹட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Greenweek வாரத்தை முன்னிட்டு அண்மையில் BCS மற்றும் Esoft நிறுவனங்களினால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட 'Digital Wallpaper Competition 2014' இல் மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவன் எம்.சாபீர் வெற்றியாளராக தெரிவுசெய்யப் பட்டுள்ளார். இவருக்கு 'Best Designer' என்று பெயரிட்ட கேடயமும் வெற்றியாளர் சான்றிதழும் BCS Certificate Level ஐ முடிப்பதற்கு ரூபா 29,000 பெறுமதியான புலமைப்பரிசினையும் Esoft Metro Campus நிறுவனத்தினர் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.






கொப்பேகனே கல்வி வலயத்திற்குட்பட்ட பன்னவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் அப்பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது, போட்டியில் 393 மொத்தப் புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்ற அல்-அஸ்ஹர் இல்லத்தின் தலைவரான மாணவன் டீ.சி.எம்.ஹஸானுக்கு வட மத்திய சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சுமித் சேனாரத்ன நிக்கவரெட்டிய கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல இணைப் பணிப்பாளர் எம்.ஏ.சலாஹுதீன், பன்னல முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.கே.ஏ.ஜலால்தீன் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதை முதலாவது படத்திலும், 19 வயதிற்கு கீழ்ப்பட்ட மகளிர் போட்டிகளில் வெற்றியீட்டிய அல்-அஸ்ஹர் இல்லத்தின் மாணவி எஸ்.எல். நஜியாவுக்கு இப்பாடசாலையின் பழைய மாணவரும் வர்த்தகருமான எஸ்.எல்.ரஹ்மான் வெற்றிப் பதக்கத்தை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம், தகவல்: கொப்பேகனே நிருபர்)



றம்புக்கனை-ஹுரிமழுவையை சேர்ந்த அக்ரம்-ஹுஸ்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் அஹ்னாப், தனது இரண்டாவது பிறந்தநாளை 01.05.2014 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனின் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கலேவெல-புவக்பிடியைச் சேர்ந்த அஸிஸ்-அணிஸா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா இல்மா, தனது ஆறாவது பிறந்தநாளை 08.05.2014 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.



நிந்தவூர்-6, நெசவாலை வீதியைச் சேர்ந்த முஹம்மத் சப்ராஸ்- நுஸ்ரத் ஷிபானி தம்பதியரின் செல்வப் புதல்வி மிஹ்ரா மர்யம், தனது முதலாவது பிறந்தநாளை அண்மையில் விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் வளங்கள் பல பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஜெ.மஹ்தியா பானு,
பள்ளிவாசல்துறை மு.ம.வித்.,
பள்ளிவாசல்துறை.



யோ.கோமகள்,
கிளிநொச்சி இந்.கல்., கிளிநொச்சி.



கீர்த்திகன்,
சென்.ஜோசப் கல்.,
மஸ்கெலியா.



மு.பாறுஜன,
யா/சாவகச்சேரி இந்.கல்.,
சாவகச்சேரி.



த.சுடரினி,
உடையார்கட்டு அரசினர் த.க.பாட.,
உடையார்கட்டு.




ஜெ.ஜெயகாந்,
புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வித்.,
திருகோணமலை.



ஐ.முஹம்மத் இன்சாப்,
ஹமீதியா மு.ம.வித்.,
கும்பலங்க.



எம்.ராஷிட் அலி,
அஸனாகொடுவ மு.க.வித்.,
அஸனாகொடுவ.



பி.கோகுலன்,
ஹகிரின் தமிழ் வித்., நுவரெலியா.



எம்.சரிக்,
மேர்சி கலை வளாகம்,
மதுரங்குளி.



எஸ்.தேசிவன்,
கண்டி விவேகானந்தா த.வித்.,
கண்டி.



நிஸ்பா நிஸார்,
நிக/பன்னவ மு.ம.கல்லூரி.



இ.ரேக்ஷினி, தல்முனை.



கு.நிசாந்தி,
யா/வடமராட்சி இந்து மக.கல்.,
வடமராட்சி.



எஸ்.திரிஷான்,
பாரதி மகா வித்., பதுளை.


**பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!**

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைகளின் சிகரமாகிய இமயமலை!



இமயமலை வரைபடம்

"இதோ உண்மையான மலை..! இவ்வாறானதொரு மலை வேறு எங்கும் இல்லை..." ட்யாட் கிப்ளிங்கின் 'கிம்' என்ற நாவலில் வரும் 'லாமா' என்ற கதாபாத்திரம் கூறும் மேற்படி வசனம் அழகிய இமயமலையைப் பற்றியதாகும்.

அந்த நாவலில் இந்த மலையைப் பற்றி மேலும் இவ்வாறு கூறப்படுகின்றது. "இந்த மலையின்மீது முற்றிலும் பனிபடர்ந்துள்ளது. பல மைல் தூரம் மேற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் விரிவடைந்து செல்லும் இதுவொரு ராட்சத மலைத் தொடராகும்.


இமயமலைத் தொடரானது, இந்தியாவின் வடகிழக்குப்பகுதியில் பரந்துள்ள ஒரு மலைத்தொடராகும். இம்மலைத்தொடர் சுமார் 2400 கி.மீற்றர் வரை பரவியுள்ளது. இதன் அகலம் 160-240 கி.மீற்றர் ஆகும். இமயமலையானது, வடக்கில் திபெத் மேட்டுநிலத்தையும் தெற்கில் இந்திய உப கண்டத்தையும் பிரிக்கும் ராட்சதத் தடுப்பாகும். இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகள் வரை இந்த இமயமலைத் தொடர் பரவியுள்ளது.

ஒன்றுக்கொன்று சமாந்தரமான மூன்று மலைத்தொடர்களினால் ஆனதே இந்த இமயமலைத் தொடராகும். இங்கு உயிர்ப்பல்வகைமைத் தன்மையை அதிகம் காணலாம். மலைச்சிகரங்களில் பனி படர்ந்துள்ளதுடன், மலையின் கீழ்ப்பகுதியில் மழைக்காடுகளும் மலையின் மையப்பகுதியில் மலைசார் காடுகளும் உள்ளன. மலைப்பகுதியில் பல பள்ளத்தாக்குகள் உள்ளன. இவை 15,000 அடி உயரத்தில் அமைந்துள்ளன. மலை அடிவாரங்களில் பல காடுகள் உள்ளதனால், அக்காடுகளில் பல வகை உயிரினங்கள் வசிக்கின்றன. இமயமலையிலும் அயல் மலைகளிலும் 'யெக்' இன மாடுகள் வசிக்கின்றன. என்டிலோப் வகை ஆடுகளான 'டாக்கீன்கள்' கிழக்கு இமயமலைப் பகுதிக்குரிய உயிரினமாகும். டார் (Tahr) எனப்படும் மண்ணிறமான அடர் ரோமங்கள் கொண்ட காட்டு ஆடுகளும் இமயமலைப்பகுதியில் வசிக்கின்றன.

## உயரமான சிகரம்

இமயமலையின் உயரமான இடமாக மட்டுமன்றி, உலகின் உயரமான பகுதியாகவும் எவரெஸ்ட் சிகரம் கருதப்படுகின்றது. இது 29,029 அடி (8,848 மீற்றர்) உயரமானது. இமயமலையின் ஏனைய உயரமான இடங்களாக கார்கோரம் (K2), கைலாஷ், கன்ச்சன்ஜுங்கா, நங்கா பிரபாத், அன்னபூர்ணா மற்றும் மனசுலு என்பனவற்றைக் கூறலாம்.

பிரித்தானிய நில அளவையியலாளரான கேர்னல் சேர். ஜோர்ஜ் எவரெஸ்ட் என்பவரின் ஞாபகார்த்தமாகவே இம்மலைச் சிகரத்திற்கு 'எவரெஸ்ட்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. எவரெஸ்ட் மலைச் சிகரத்திற்கு முதன்முதல் சென்றவர்களில் சேர். எட்மண்ட் ஹிலரி மற்றும் டென்சிங் நோர்கே ஆகியோர் பிரதானமானவர்களாவர். இவர்களின் பயணம் 1953 இல் நிகழ்ந்தது.


சேர். ஜோர்ஜ் எவரெஸ்ட்

## மக்கள் சூன்யப் பகுதி

தனிமையானதும், பின்தங்கியதுமான இமயமலைப் பகுதியானது மக்கள் சூன்யப் பகுதியாகும். இங்கு மக்கள் நடமாட்டம் என்பது மிகவும் குறைவு. இமயமலையின் தென் பகுதியில் உள்ள பெரும் பள்ளத்தாக்குப்பகுதியில் உள்ள நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் இதுவரை புகையிரதப்பாதைகளே இல்லை. ஆறுகள் உருவாக்கிய பெரும் பள்ளங்கள் பல இங்கு உள்ளன. நிலப்பகுதி மேடு பள்ளமாகக் காணப்படுவதால் தெருக்களையும் புகையிரதப் பாதைகளையும் நிர்மாணிப்பது இலகுவான காரியமல்ல.

இமயமலையின் கிழக்குப் பகுதியில் சீனாவை நோக்கிச் செல்லும் பாதைகள் உள்ளன. மிகவும் நீண்டதொரு பாதை மலை அடிவாரத்தில் இருந்து வடக்கு நோக்கிச் செல்கின்றது. இங்கு பிரதானமாக பள்ளத்தாக்குப் பகுதிகளிலேயே மக்கள் பெரும்பாலும் வசிக்கின்றனர். வரட்சி காரணமாக விவசாயிகள் இங்கு பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நேபாளத்தில் வசிக்கும் 'நெவார்கள்' பலவிதமான பழச்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். மலை அடிவாரத்தின் பல பகுதிகளில் மந்தைகள் பலவற்றைக் காண முடியும்.


பால்ட்டரோ பனித்தகடு

## இமயமலைத் தொடரில் அமைந்துள்ள பிரதான நகரங்கள்

இந்தியா - ஸ்ரீநகர், காஷ்மீர், சிம்லா, டார்ஜிலிங்

நேபாளம் - காத்மண்டு, பட்டன், பத்காஓன்


யெக் மாடு


டார்

## ஆறுகள்


ஆசியா கண்டத்தின் பிரதான ஆறுகளின் தொகுதி இமயமலையிலிருந்தே ஆரம்பமாகின்றது. அவையாவன: கங்கை, பிரம்மபுத்ரா, இந்து, யாங்சே என்பனவாகும். யாலுங்க், மஞ்சள் ஆறு, மீக்கொங் போன்ற மேலும் பல ஆறுகளும் இங்கிருந்து ஆரம்பமாகின்றன.

## பனித்தகடுகள்

இமயமலைத் தொடரானது, உலகின் மூன்றாவது மிகப்பெரிய பனிப்பகுதியாகும். இமயமலைப் பகுதியில் சராசரியாக 15 ஆயிரம் பனித்தகடுகள் உள்ளன. 72 கி.மீ நீளம் கொண்ட சியாச்சென் பனித்தகடே துருவப்பகுதிகளுக்கு வெளியே அமைந்துள்ள பெரிய பனித்தகடாகும். இது தவிர பால்ட்டரோ, பியாகோ, நுப்ரா மற்றும் ஹிஸ்பூர் போன்ற பனித்தகடுகளும் இப்பகுதியில் உள்ளன. (-இ)


சேர். எட்மண்ட் ஹிலரி மற்றும் டென்சிங் நோர்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாரணர் ஆலோசனை

சாரணர்கள் ஏன் நடைப்பிரயாணம் மேற்கொள்கின்றார்கள்?

சாரணர்களின் நடைப்பிரயாணம் வெறுமனே நடைப்பிரயாணமாக அமைவதில்லை. இதில் பல ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுக்களப் பிரயாணமாக காணப்படுவதனால் இது மகிழ்ச்சி நிறைந்ததாக சாரணர் களுக்கு காணப்படுகின்றது. நடைப் பயணம் மேற்கொள்வதில்

## விஜய் சாரணர் உலகம்

நீண்டதூரம் பயணிப்பது, தாமாக கூடாரம் அமைப்பது, பாத்திரம் இன்றி இயற்கைப் பொருட்களைக் கொண்டு சமைத்த உணவினை உட்கொள்வது போன்ற பல சுவையான விடயங்கள் இதில் அடங்கியுள்ளன.

தினமும் இதனை சாரணர்கள் மேற்கொள்வதன்மூலம் அவர்களின் உடலுக்கு ஆரோக்கியத்துடன் கூடிய சுறுசுறுப்பைக் கொடுக்கும். சாரணர்கள் பயிற்சியில் முக்கியமான தொன்றாக நடைப்பயணம் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் மூலம் சாரணருக்கு புதிய இடங்கள், புதிய நபர்கள், புதிய சூழல், இயற்கை அழகு போன்றவற்றை



ரசிக்கவும், பார்க்கவும் முடிகின்றது. இதன்போது நீங்கள் செல்லும் பாதையின் வரைபடம், பார்த்த இடம் அதன் முக்கிய குறிப்புக்களை எழுதுதல், விசித்திரமான பொருட்கள் என்பவற்றை புகைப்படம் எடுத்தல் மற்றும் அரிய பொருட்களை சேகரிக்கவும் முடியும்.

(அறிவுரை தொடரும்...)

**அடுத்த வாரம் வருவது...**

சாரணர் குழுவில் பயன்படுத்த வேண்டிய முக்கிய ஆவணங்கள்.

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர்கள் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| கோமரோஸ் | 1,725 | 1990 | 1975 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

## 121 ஆவது சாரணர் உயர் கற்கைநெறி (கலைக்கூறு - IV)


*121 ஆவது சாரணர் உயர் கற்கைநெறி (கலைக்கூறு -IV) 2014 மே மாதம் 02 ஆம் திகதி தொடங்கி 07 ஆம் திகதி வரை நுவரெலியா பீட்ரு சாரணர் பயிற்சி முகாமில் 6 நாட்கள் நடைபெறவுள்ளன. இது தொடர்பான நேர்முகத் தேர்வு இலங்கை சாரணர் சங்கத்தின் தேசிய தலைமைக் காரியாலயத்தில் ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி நடைபெற்று தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் இலங்கை சாரணர் சங்கத்தின் தேசிய தலைமைக் காரியாலயத்தில் இருந்து தேசிய பயிற்சி ஆணையாளரினால் அனுப்பப்பட்டுள்ளது. இதில் பங்குகொள்வோர் மு.ப 9.30- மு.ப 10.30 மணிக்கிடையில் பதிவுகளை நுவரெலியா பீட்ரு சாரணர் பயிற்சி முகாமில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.*

## பேடன் பவல் மற்றும் குடும்பத்தினரின் அரிய வகைப் புகைப்படங்கள்





தம்பதிகளாக தம்மை வெளிப் படுத்தி நிற்கும் பேடன் பவல் மற்றும் அவரது துணைவியார் சீமாட்டி பேடன் பவல் அவர்களுடைய அரியவகைப் புகைப்படங்களில் சில....



சாரண முகாம் அமைப்புக்களின்போது இரவு உணவிற்கென 'நூடில்ஸ்' தயார்ப்படுத்துவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் இவ்வாறான கற்பனை திறன்மிக்க படைப்புக்களை உங்களால் வெளிப்படுத்த முடியும். உங்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற சமைத்த நூடில்ஸ்களில் அளவில் நீளமான நூடில்ஸ்களை தனியான ஒரு வெள்ளை நிற வெறுந்தாளில் அப்புறப்படுத்தி வையுங்கள். பின்னர் இந்த நூடில்ஸ்களை உங்கள் மனதில் தோன்றுகின்ற அமைப்பிற்கேற்ப அந்த உருவ அமைப்புக்களை அமைத்துக்கொள்ளுங்கள். தலா இரண்டுபேர் வீதம் போட்டியாக இதனை செய்வதன்மூலம் சிறந்த படைப்பை மேற்கொள்பவரை வெற்றியாளராகக் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 'பேன்' தொல்லையால் அவதிப்படும் மாணவியர்

'பேன்' தொல்லையிலிருந்து விடுபட முடியாமல் அநேகமான பெண்கள் சிரமப்படுவதுண்டு. பாடசாலை செல்லும் பிள்ளைகளும் 'பேன்' தொல்லையால் தலையை சொறிந்துகொண்டே இருப்பதையும் காணலாம். இதனால், ஆசிரியர்களின் கண்டிப்பிற்கு ஆளாகும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இவ்வாறு சிரமங்களைத் தருகின்ற 'பேன்' பற்றிய சில விபரங்கள் வருமாறு;

'பேன்' என்பது ஒருவகை ஒட்டுண்ணியாகும். பேன்களில் பழுப்பு நிறப் பேன்களும், கறுப்பு நிறப் பேன்களும் உள்ளன. இவை உயிர் வாழ்வதற்காக மனிதனின் ஒரு சிறு துளி இரத்தத்தை உறிஞ்சி அதில் உயிர் வாழ்கின்றன. இவை பெரும்பாலும் தலையின் பிடரிப்பகுதி, காதோரம் ஆகிய பகுதிகளில் உள்ள முடிகளில் முட்டையிடும். இதையே 'ஈர்' என்கின்றோம்.


ஒருவரோடொருவர் அருகருகே இருக்கும் போதும் தலையுடன் தலை முட்டும்போதும் ஒருவர் பாவித்த சீப்பை மற்றையவர் பாவிக்கும்போதும் பேன் தொற்று ஏற்படுகின்றது. பேன் தலையில் பரவும் சந்தர்ப்பங்களில் எந்தவொரு அறிகுறியும் இருக்க மாட்டாது. ஆனால், அவை பெருகிக் கடிக்கும் போதுதான் பேன் இருப்பது தெரிய வரும்.

## பேன்களின் வகைகள்...

பேன்கள் 2 வகைப்படும்

1. தலைப் பேன்
2. சீலைப் பேன்

இதில் மனிதனின் தலையில் வாழும் பேன் தலைப்பேன் ஆகும். உடைகளின் மடிப்புகளில் வசிக்கும் பேன்களே சீலைப்பேன் எனப்படுகின்றது.






## பேன்களின் வாழ்க்கை முறை

பேன்கள் மிக விரைவாக இனப்பெருக்கம் செய்யக்கூடியவை. ஒரு பெண் பேன் ஒரு மாதத்தில் சில நூறு குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றன. இப்பேன்கள் தலைமயிர்களையும், உடைகளின் துணிகளையும் இறுக்கமாகப் பற்றிக் கொள்கின்றன. பேன்களில் காணப்படுகின்ற உறிஞ்சிக் குழல்களின் முனையில் சிறு கொக்கிகள் உள்ளன. இதன்மூலமே பேன்கள் மனிதனின் இரத்தத்தை உறிஞ்சுகின்றன. பேன்களுக்கு இறகுகள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


## பேன்களைத் தடுத்தல்

பேன்கள் தொற்றுவதைத் தடுப்பதற்கு உடலையும் தலையையும் சுத்தமாகப் பேண வேண்டும். உடைகளின் மடிப்புக்களில் 'அயன்' மூலம் நன்றாக சூடேற்றி அழுத்துவது நல்லது. இதன்மூலம் சீலைப்பேன் முட்டைகளை அழிக்க முடியும். இயன்றவரையில் பேன் தொற்று ஏற்படாமல் அவதானமாக இருப்பது நல்லது. அப்படியும் இல்லாவிட்டால் இருக்கின்ற பேன்களை ஒழிப்பதற்கு பொருத்தமான மருந்து வகைகளைப் பாவிக்கலாம். பேன் தொல்லை இல்லாதுவிட்டால் வகுப்பிலும் எந்தவொரு இடைஞ்சலும் இல்லாமல் படிப்பை மேற்கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்களில் மிகச் சிறந்த நீச்சல் வீரன்!







உலகில் ஏராளமான உயிரினங்கள் வாழும் பகுதி 'கடல்' ஆகும். கரையை அண்டியுள்ள நீர் குறைந்த பகுதியிலிருந்து ஆழ்கடல் பகுதி வரை நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப கடலில் பல்வேறு உயிரினங்கள் வசிக்கின்றன. இந்த கடல்வாழ் உயிரினங்களை சின்னஞ்சிறிய மீன்கள், கடல் ஆமைகள், கடற்பஞ்சுகள், பெரிய மீன்கள், பறக்கும் மீன்கள், விஷ மீன்கள் என பலதரப்பட்டவையாக வகைப்படுத்தலாம்.

இந்த மீனினங்களில், மிக வேகமாக நீந்தும் ஆற்றல் பெற்ற ஒரு மீனினமும் இருக்கின்றது. அதுதான் 'மயில்மீன்' ஆகும். இந்த மீனினம் ஆழ்கடலில் ஒரு மணித்தியாலத்திற்கு 110 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் நீந்திச் செல்லக்கூடியது. உலகின் அனைத்து கடல்வாழ் உயிரினங்களினதும் நீச்சல் வேகத்தைவிட இதுவே மிகக் கூடிய வேகமாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மீன்களில் மிகச் சிறந்த நீச்சல் வீரனாக இதனை அடையாளப்படுத்தலாம்.

இந்த மீனினத்தை ஆங்கிலத்தில் 'Sailfish' என்று அழைப்பர். இதன் அறிவியல் பெயர் *Istiophorus platypterus* என்பதாகும். உலகில் வெப்பமான நீரினைக்கொண்ட ஆழ்கடல் பகுதிகளிலேயே இவை அதிகம் வசிக்கின்றன. இதன் உடல் பொதுவாக கடும் நீலம் கலந்த சாம்பல் நிறத்தில் காணப்படும். வெள்ளி நிறம், ஊதா போன்ற நிறங்களையும் உடலில் காணலாம். மயில்மீனினால் அதன் உடல் நிறங்களை மாற்றிக்கொள்ளவும் முடியும். நரம்பு மண்டலத்தின்மூலமே இவற்றின் உடலின் நிறம் மாறும் தன்மை கட்டுப்படுத்தப்படுகின்றது.

இதன் முதுகுப்பகுதியில் அதாவது மேல் பகுதியில் கறுப்பு நிறத்தில் மேலெழுந்தவாறு காணப்படும் இறக்கையும்



(துடுப்பு -fin), வாய் பகுதியில் காணப்படும் கூரிய அலகும் இந்த மீனினத்திற்கே உரிய விசேட அம்சங்களாகக் கருதப்படுகின்றன. நீந்தும்போது பெரும்பாலும் இதன் மேல் பகுதி இறக்கை கீழ்ப்பக்கமாக மடிந்தே காணப்படும். ஆனால், அந்த மீன் அச்சம்கொள்ளும்போதோ அல்லது பதற்றமடையும்போதோதான் இந்த இறக்கை மேலெழுந்தவாறு நிமிர்ந்து காணப்படும். இதன்போது, அந்த மீன் பாரிய தோற்றத்தைக் கொண்டதாக காட்சியளிக்கும். மேலும், இதற்கு இருக்கும் கூரிய அலகின்மூலம் கடலில் பயணிக்கும் படகுகளைக்கூட கொத்தி உடைத்துவிடும் ஆற்றலைக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


பொதுவாக, மயில்மீனொன்று வருடத்திற்கு 1.2 மீற்றர் தொடக்கம் 1.5 மீற்றர் நீளம் வரை வளரும். நன்கு வளர்ச்சியடைந்த மீனொன்று 90 கிலோ கிராம் வரையான எடையைக் கொண்டிருக்கும். கடலில் வாழும் சிறிய மீனினங்களே இவற்றின் விருப்பத்திற்குரிய உணவாகும். இவற்றின் ஆயுள்காலம் சுமார் 16 ஆண்டுகள் ஆகும்.

-என்ஜீ

## 'GPS' என்றால் என்ன?

'GPS' என்பது 'Global Positioning System' என்பதைக் குறிக்கும். 'புவியிடங்காட்டி' அல்லது 'புவி இடம் காட்டும் அமைப்பு' என்று இது தமிழில் அர்த்தப்படுத்தப்படுகின்றது. அதாவது, விண்ணில் மிதக்கும் செய்மதிகளின் உதவியைக்கொண்டு எந்தவோர் இடத்தையும் சரியாகக் காட்டும் தொழில்நுட்பமே இது!

GPS TRACKING Device என்று, இதற்கென




தனியாக ஒரு கருவி இருப்பினும், இப்போதெல்லாம் கைத்தொலைபேசிகளிலேயே இந்த வசதி வந்துவிட்டது. நீங்கள் இருக்கும் இடம், சுற்றியுள்ள வீதிகள், இடங்கள், போக வேண்டிய பாதை, தூரம் என அனைத்தையும் (உலகில் எங்கிருந்துகொண்டும்) நீங்கள் இதன்மூலம் அறியலாம்.

விண்வெளியில் சுமார் 30 செய்மதிகள் இப்பணிக்கென நிறுவப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தமக்கே உரித்தான தனித்துவமான பாதையில் பூமியை வலம் வந்தபடி இருக்கும். பூமியிலுள்ள குறிப்பிட்ட ஓர் இடத்தை, குறைந்தது 4 செய்மதிகள் எப்போதுமே கண்காணிக்கும் விதமாக இவற்றின் சுற்றுப்பாதைகள், வேகம் என்பன ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கும்.

உங்களிடம் GPS வசதி கொண்ட கருவிகள் ஏதும் இருக்குமானால், இந்த செய்மதிகள், அந்தக் கருவிக்கு ஒரு சிக்னலை (Signal-அலையை) அனுப்பும். அந்த சிக்னல், குறித்த கருவியை அடைந்து-மீண்டும் குறித்த செய்மதிகளை அடைய எடுக்கும் நேரம் மற்றும் அனுப்பிய சிக்னலின் வேகம் ஆகியவற்றைக் கொண்டு, உங்களிடமிருக்கும் கருவிக்கும் செய்மதிகளுக்கும் இடையிலான தூரம் கணிக்கப்படும். இப்படி, நான்கு செய்மதிகளும் கணக்கிட்ட தூரத்தை ஒருங்கிணைத்தால், சிக்னல்கள் ஒன்றிணையும் (இடைவெட்டும்) புள்ளியில்தான் நீங்கள் இயக்கும் கருவி இருக்கிறது (அதாவது நீங்கள் இருக்கின்றீர்கள்) என்று அர்த்தம்!



விபாகர்

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 30, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org